




# போருக்கப்பால்

## மனித நேயம் தேடல்....

மணிப்புலவர்
மருதூர்.ஏ.மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் சிற்றுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கப்பால்
# மனித நேயம் தேடல்

அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின்

**(சிற்றுரைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கப்பால்
# மனித நேயம் தேடல்

அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின்

**(சிற்றுரைகள்)**

ஆக்கம்
மணிப்புலவர்
## மருதூர் – ஏ – மஜீத்
B.A. (Hons) P.G.D.E.
S.L.E.A.S

03

வெளியீடு
மருதூர் வெளியீட்டுப்பணிமனை
436, பழைய சந்தை வீதி,
சாய்ந்தமருது - 03
கல்முனை
சிறீலங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : போருக்கப்பால்
மனித நேயம் தேடல் (சிற்றுரைகள்)

முதற்பதிப்பு : 2011 மே

ISBN : 978-955-1058-07-4

© : மணிப்புலவர்
மருதூர் - ஏ - மஜீத்

கணினி ஒழுங்கமைப்பு : எஸ். எல். அப்துல் ஹை
யூ டீ எச் கம்பியூபிறின்ட்

வெளியிடுவோர் : மருதூர் வெளியீட்டுப்பணிமனை
436, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது - 03,
கல்முனை, சிறீலங்கா, தொலைபேசி : 0775000660

அச்சிட்டோர் : யூ டீ எச் கம்பியூபிறின்ட்
இல. 51/42, மொகிதீன் மஸ்ஜித் வீதி, கொழும்பு 10.

விலை : 285.00



Heading : BEYOND THE WAR
(The Short Speeches of Hon. M.H.M. Ashraff)
ISBN : 978-955-1058-07-04

© : Manippulavar Maruthur A. Majeed

Page Setting by : Al Haj S.L. Abdul Hai
UDH Compuprint

Published by : Maruthur Velieeddu Panimanai
436, Old Market Road, Sainthamaruthur - 03.
Kalmunai, Sri Lanka. 0775000660

Printed by : UDH Compuprint
51/42, Mohideen Masjid Rd., Colombo 10.

Price : 285.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

**கௌரவ ரவூப் ஹக்கீம் (பா.உ.)**
*தேசிய தலைவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்*

**M.T.A. ஹஸன் அலி (பா.உ.)**
*செயலாளர் நாயகம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்*

**Dr. T.M.A. உலுமுத்தீன்**
*ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்*

**அல்-ஹாஜ் S.H.M. ஜெமீல்**
*முன்னாள் முஸ்லிம் சமய கலாசார செயலாளர்*

**கலாபூசணம் U.L. ஆதம்பாவா**
*ஓய்வு பெற்ற ஆசிரியர்*

**அல்-ஹாஜ் S.L. அப்துல் ஹை**
*கொழும்பு UDH அச்சக உரிமையாளர்*

**கவிஞர் மேமன்கவி அப்துல் றஸாக்**
*சாஹித்ய மண்டல பரிசு பெற்ற கவிஞர்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இனிய நண்பரும்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
உயர்பீட உறுப்பினருமான
Dr. T.M.A. உலுமுதீன் அவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
இந்நூல்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காக
உழைத்து உயிர்நீத்த
போராளிகள் அனைவருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிக்க முன்
# யோசிக்க



1953ம் ஆண்டு நான் கல்முனை சாஹிராக் கல்லூரியில் 7ம் வகுப்பு கற்கும் மாணவன். அப்பொழுது கல்லூரியின் பெயர் சாய்ந்தமருது ஜூனியர் ஸ்கூல் என்பதாகும்.

நான் பாடசாலைக்குப் போகும்போது எனது தாயார் அன்றைய செலவுக்கு பத்துச் சதம் கையில் கொடுப்பார். அதில் ஐந்து சதத்தைச் சேமித்துக் கொள்வேன்.

அத்தோடு, இடையிடையே சந்தைக்குச் செல்வதற்காகவும், கடைக்குப் போவதற்காகவும் தாயாரிடமிருந்து கிடைக்கும் கூலியும் கையில் சேமிப்பாக இருக்கும். மேலும் கல்கண்டுப் பத்திரிகை வாங்கவென தகப்பனாரிடமிருந்து பதினைந்து சதம் கிடைக்கும்.

மொத்தம் கிட்டத்தட்ட ஒரு ரூபா ஒரு கிழமைக்கான கையிருப்பு.

இதனை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு சனிக்கிழமையும் "மெட்னி ஷோ" பார்ப்பதற்காகவும், கல்கண்டு பத்திரிகை வாங்குவதற்காகவும் கல்முனைக்குப் பயணம் மேற்கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் எனது ஆப்த நண்பர் காலஞ்சென்ற "நைஸ் இஸ்மாயில்" அவர்களும் வருவார். அவரிடமும் இவ்வாறு சேமித்த பணமிருக்கும். பணத்தில் ஏதும் குறைவு ஏற்பட்டால் ஆளுக்காள் சமாளித்துக் கொள்வோம்.

பஸ்ஸில் போகும் பணத்தையும் சேமிக்கும் நோக்கோடு நடந்தே போவோம். பஸ்ஸூம் அக்காலத்தில் ஆடியில் ஒன்று, ஆவணியில் ஒன்று என்று மிகமிகக் குறைவாகவே வரும்.

பயணம் போகவர மூன்று மைலுக்குள் உள்ள தூரம்தான்.

எங்களுக்கோ இத்தூரம் வெகு தொலைதூர பிரயாணம் போல் இருக்கும். அதனால் இப்பயணத்தின் ஆனந்தமும் மகிழ்ச்சியும் அளவிட்டுக் கூற முடியாதவை. நினைத்தால் இன்றும் இனிக்கிறது.

எனது வீட்டில் இருந்து நடந்து தமிழ் குறிச்சியைக் கடந்து, பிரதான பாதைக்கு வந்து வண்ணாரக் கண்ணிர கடையையும், கதிரேசனுடைய சலூன் கடையையும் கடந்து, காசிப்பிள்ளையின் கொல்லன் கம்மாலைக்கு வந்து, கொல்லன் கம்மாலையில் துருத்தியின் மூலம் காற்று ஊதப்பட்டு பட்டறையிலுள்ள நெருப்பு எரிவதனையும், அதனுள் இரும்பு பழுக்கக் காய்ச்சப்பட்டு அதுவும் நெருப்புத் தணல் போல் இருப்பதனையும் கண்டு இரசித்தவாறு பாதையின் ஓரத்தால் நடக்க ஒரு அரசமரமும் பறையர்களுடைய கோயில் ஒன்றும் தென்படும். அதிலிருந்து சற்று நடக்க கல்முனைகுடி சந்தை வரும். ***(இன்று அந்தச் சந்தை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையாகவுள்ளது)***

சந்தையின் அருகே இஸ்லாமியர் ஒருவரின் தேநீர்க்கடை, அந்தக் கடையருகில் ஒரு அரசமரம். அந்த அரசமர நிழலிலே மயிலொன்று ஆயாசமாக நிற்கும். இடையிடையே தோகை விரித்தாடும்.

அம்மயில் அந்தக் கடைக்காரருக்குச் சொந்தமானது.

இதனைப் பார்த்து இரசித்தவாறு கொஞ்சத் தூரம் நடக்க கல்முனைக்குடி பெரிய பள்ளிவாயலும் மையவாடியும் வரும், அதனெதிரே பெரியதொரு குளம்.

குளத்தையடுத்து நீண்ட பெரிய வயல்வெளி கண்ணிற்கெட்டாத தூரம் வரை தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அப்பால் வெகு தூரத்தில் தொடுவானத்தோடு சேர்ந்தாற் போல் காடுகளும் மலைகளும் அள்ளி அப்பிய சித்திரம் போல் காட்சி தரும்.

இதனை இரசித்தவாறு நடக்க பாதையோரத்தில் வேலிகளற்ற அந்த வளவில் கல்லுரலை விடப் பன்மடங்கு பெரிதான உரல் ஒன்று நடப்பட்டிருக்கும்.

அதனைச் சுட்டிக்காட்டி எனது நண்பர் நைஸ் இஸ்மாயில் அவர்கள் "எண்ணெய் உருக்கும் செக்கு இதுதான்" எனச் சொல்லி விட்டு பக்கத்தில் இருந்த வீட்டைக் சுட்டிக் காட்டி "இதுதான் வழக்குப் பேசுகிற எம்.ஏ.எல். காரியப்பர் வீடு. நானும் எங்க வாப்பாவும் இங்கு ஒரு தரம் வழக்குப் பேச வந்திருக்கிறோம்" எனக் கூறுவார்.

இந்த வீட்டிற்குப் பக்கத்திலும் இரண்டொரு வீடுகள்.அவற்றிற்கு நேர் எதிரே பாதையின் மறு பக்கத்தில் குளக்கரையின் ஓரமாக முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் தாயாரின் வீடு இருக்கும் இடம்.

ஆனால், அன்று இந்த வீடு இருந்ததோ இல்லையோ சரியாக ஞாபகம் இல்லை.

இவற்றில் இருந்து சற்று நடக்க கட்டையடி வரும். பெரியதொரு வாகை மரமும் இரண்டு கடைகளும் காட்சி தரும். அவற்றிலொன்று டாக்டர் உதுமாலெப்பையின் தகப்பனாருடையது. கட்டையடி வந்தால் கல்முனை வந்த மாதிரித்தான் என்று எனது நண்பர் முணுமுணுப்பார்.

சற்றுத் தூரம் நடக்க கோயில் ஒன்று தென்படும்.

அது "தரவைக் கோயில்" என்று எனது நண்பர் கூறுவதற்கு முன் நான் முந்திக் கொண்டு "இந்த தரவைக் கோயில் றோட்டாலும் கல்முனை கடற்கரை கொடியேற்றப் பள்ளிக்குப் போகலாம்" என்பேன்.

தரவைக் கோயிலைத் தாண்டியதும் அணியணியாய்ப் பல வம்மி மரங்கள் பூத்துக் குலுங்கும்.

அவ்விடத்தில் ரம்மியமான ஒரு வாசனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுத் தேடி எடுத்து பூவிற்கு எறிந்து, இரண்டொரு வம்மிப் பூக்களை பெற்று, கையிலே அவற்றை எடுத்துத் தடவிப் பார்த்தவாறு நடக்க, அடுத்த ஒரு வம்மி மர நிழலில் தண்ணீர்ப்பந்தல் அமைந்திருக்கும்.

பானையில் நீர் வார்த்து மூடி அந்த மூடியின் மேல் ஒரு மூக்குப் பாத்திரமும் வைக்கப்பட்டிருக்கும். அதிலே நீர் அள்ளி இருவரும் அன்னார்ந்து உதடுகளில் படாதவாறு நீரை வாயினுள் ஊற்றி குடித்துவிட்டு நிமிர்ந்து பார்க்க "சாண்டார வைத்தியக் கடை" தெரியும்.

**(மூக்குப் பேணி என்பது உதடுகளில் படாதவாறு தண்ணீரை வாய்க்குள் ஊற்றிக் குடிக்கும் பாத்திரம்)** தொடர்ந்து நடக்க இடையிலே சட்டிபானை சுடும் குயவனின் சூளை வரும்.

ஒருவர் காலால் களிமண்ணை தண்ணீர் ஊற்றி மிதித்துப் பதப்படுத்தி, கையிலே எடுத்து உருண்டையாக்கி பக்கத்தில் நிற்கும் அவரது சகபாடியிடம் கொடுப்பார்.

அவர் அதனைப் பெற்று சுழற்றும் ஒரு கருவியிலேவைத்து ஒரு கையால் சுழற்றி மறு கையால் இலாவண்யமாக அக்களிமண்ணை தடவிக் கொடுக்க பானை, சட்டி, குடம், கூசா என அவர் நினைத்த உருவம் வரும். தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருக்கும்.



செய்யப்பட்ட பானை சட்டிகளை இளம் வெயிலில் காயவிடுவார்கள்.

மறு நாள் காய்ந்தவைகள் நெருப்பு வைக்கப்பட்ட வைக்கோல் போருக்குள் வைத்து சுட்டெடுப்பார்கள். அவை விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். "களிமண்ணால் சட்டி, பானை செய்பவன் குயவன்" எனப் படித்தது ஞாபகம் வரும்.

இவ்விடத்திலிருந்து சற்று நடக்க "சொலுக்காரின் கடை" வரும். இந்தக் கடைதான் அந்தக் காலத்தில் பெரிய கடை. இக்கடை இந்திய வியாபாரி ஒருவரின் கடையாகும். வியாபாரத்திற்காக இங்கு வந்தவரென பெரியவர்கள் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இக் கடைக்கு அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, நற்பட்டிமுனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிருப்பு, கல்லாறு போன்ற இடங்களில் இருந்தெல்லாம் பொருட்களை வாங்க இக்கடைக்கு வருவார்கள்.

இக்கடையைத் தாண்ட பெரியதொரு அரசமரம். அம்மரநிழலில் மூதாட்டி ஒருவர் ஆலங்காய்ப் பணியாரம் விற்பார்.

ஈர்க்கிலில் கோர்க்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்த ஆலங்காய்ப் பணியாரத்தை வாங்கிச் சாப்பிட ஆசையேற்படும். வாங்கிச் சாப்பிட்டால் படம் பார்க்க பணம் குறைந்துவிடும் என்ற பயத்தால் நாங்கள் வாங்கிச் சாப்பிடுவதில்லை.

இப்பொழுதெல்லாம் ஆலங்காய்ப் பணியாரத்தைக் காணவே முடியாதுள்ளது.

இந்த அரசமரத்தடியில் நின்று பார்த்தால் பெரியதொரு கட்டடம் தெரியும்.

"அது வழக்குப் பேசும் கோடு" என்று எனது நண்பர் நைஸ் இஸ்மாயில் சொல்லுவார்.

ஊரில் இருந்து புறப்பட்டு இம்மரத்தைச் சேரும்வரை எங்களைத் தாண்டி ஒரு பஸ் வண்டியோ, அல்லது வேறு வாகனங்களோ போனதாக ஞாபகம் இல்லை.

இங்கிருந்து நடக்க கல்முனைச் சந்தி வரும். இடையில் மௌலானாவின் மருந்துக் கடையும் வரும். இவரும் இந்தியரே.

கல்முனை சந்தி பஸ் ஸ்டான்டில் சில கடைகள் இருக்கும். இந்தச் சில கடைகளில் ஒன்றுதான் காத்தான்குடி உமர்லெப்பையின் பீடாக்கடை.

இந்தப் பீடாக்கடையில் சினிமாப் பாட்டுப் புத்தகங்களோடு கல்கண்டு பத்திரிகையும் இருக்கும். "மானிட இன்பம்" போன்ற சில சஞ்சிகைகள் திறந்து பார்க்க முடியாதவாறு பின்பண்ணப்பட்டு கயிற்றில் தொங்கும். அட்டைப்படத்தைப் பார்த்தால் உள்ளே விரித்துப் பார்க்க வேண்டும் போல் தோன்றும் அத்தனை பாலியல் கவர்ச்சி.

பீடாக்கடையில் உள்ள புத்தகங்களை எண்ணிப் பார்த்தால் இருபது புத்தகங்களுக்கு மேல் தேறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் "மணமகள் புத்தகசாலை" என இது விரிவடைந்தது. இன்று இக்கடை மூடப்பட்டு விட்டது.

பதினைந்து சதம் கொடுத்து கல்கண்டினை வாங்கிக் கொண்டு ஹரிசன் தியேட்டரை நோக்கி நடப்போம்.

சிலவேளைகளில் "மொடன்கபே"யில் பத்துச் சதம் கொடுத்து இருவரும் தேநீர் அருந்திவிட்டுச் செல்வதும் உண்டு.

இடையில் கல்முனை சந்தை வரும், சந்தைக்குள் போய்ப் பார்ப்போம் கல்முனைச் சந்தையில் நாங்கள் எதுவும் வாங்குவதற்காகப் போவதில்லை.

புதினம் பார்க்க மட்டுமே அங்கு செல்வோம்.

இப்பொழுது இருக்கின்ற நவீன வசதிகள் அப்பொழுது அச்சந்தைக்கில்லை.

இரண்டொரு கடைகள், மற்றவைகளெல்லாம் மரநிழல் வியாபாரமே.



சந்தையின் ஓரத்தில் ஒரு வாகை மரம். அந்த மர நிழலில் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஏதாயினும் ஒரு நிகழ்ச்சி நடக்கத் தவறுவதில்லை.

உடுக்கடித்து வித்தை காட்டப்படும்.

அல்லது,

யாராயினும் ஒருவர் சர்ப்பனாப் பெட்டி வாசித்துக் கொண்டு பாடுவார்.

அல்லது,

யாராயினும் ஒருவர் மருந்து விற்பார். அவரது மருந்தால் தீராத நோயே உலகில் இருக்காது. அந்தளவு அழகாக விளம்பரம் செய்வார். தலையிடி, தலைவலி, தலைக்குத்து,

மண்டையிடி, மண்டைவலி, மண்டைக்குத்து,

கபாலயிடி, கபாலவலி, கபாலக்குத்து என்றவாறு தீரும் வியாதிகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லுவார். தலை, மண்டை, கபாலம் என்பனவெல்லாம் தலையைக் குறிக்கும் ஒரு சொல் என்பதை எல்லோரும் அறிவதில்லை.

அல்லது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிச் சாத்திரம் இடம்பெறும். பார்வையாளர்கட்குக் குறைவேயில்லை.

நாங்கள் இருவரும் அங்கு போய்ச் சேர்ந்த போது மரத்தடியில் கூட்டம் கூடிவிட்டது.

நாங்கள் இருவரும் சிறுவர்கள் என்றபடியால் சிறு இடைவெளியினூடே கஷ்டப்பட்டு உள்ளேபோய் விட்டோம்.

வழமைக்கு மாறாக ஒரு மேசை போடப்பட்டிருந்தது.

அந்த மேசையிலே குர்ஆன், பைபிள் போன்ற பெரிய புத்தகங்கள் இருந்தன.

மேசையின் அருகே நீண்ட கால்ச்சட்டையணிந்து, கழுத்திலே "ரை"கட்டி, கையிலே மணிக்கூடு பளபளக்க, ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்.

"உங்கள் எதிர்காலத்தை அறிந்துகொள்வதற்கும், நீங்கள் நினைத்த காரியம் எதுவென்று அறிந்து அதனை எவ்வாறு செய்து முடிக்கலாம் என்று ஆலோசனை சொல்வதற்கும் நீங்கள் எனக்கு கொடுக்க வேண்டியது ரூபாய் ஒன்று மட்டுமே" என்று அந்த வாட்டசாட்டமான இங்கிலிஸ் உடைதரித்த மனிதர் பேசி முடித்தார்.

அந்தக் காலத்தில் ஒரு ரூபாய் என்பது மதிப்பு மிக்கது.

இருந்தாலும் ஒரு சிலர் தங்களுடைய நினைத்த காரியம் நிறைவேற ஒரு ரூபாயை துச்சமென மதித்து நீட்டினார்கள்.

பேசியவரின் ஆளுமையும் மக்கள் மயங்க ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

திடீரென கூட்டத்தோடு கூட்டமாக நின்ற ஒருவர் "பேச்சை நிறுத்து. யாரும் காசு கொடுக்க வேண்டாம்" என உரத்த குரலில் கூறினார். அவர் வெள்ளைச் சாரம் அணிந்து வெள்ளைக் கோட்டும் போட்டிருந்தார். அந்தக் காலத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்கள் மட்டுமே கோட் அணிவார்கள். அத்தோடு அவருடைய தோற்றமும் கவர்ச்சியாகவே இருந்தது.

அவரது முகத்திலும் ஒரு தெளிவு. எல்லோரும் அவரைப் பார்த்தார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னால் நான் நினைத்த காரியத்தை சொல்ல முடியுமா?" என்று கேட்டார் அந்த நடுத்தர வயதுடைய கோட் அணிந்த மனிதர்.

"முடியும்" என்றார் மேல்நாட்டுப் பாணி சாஸ்திரி.

இருவரது பேச்சிலும் தன்னம்பிக்கையும் உறுதியும் திடமும் இருந்தது.

"முடியாது என்றால்" - கேள்விக்கணையைத் தொடுத்தார். கோட் அணிந்த மனிதர்.

"முடியாமல் போகாது. நினைத்த காரியத்தைச் சொல்லியே தீருவேன்". என்றான் சாஸ்திரி

"நான் நினைத்ததை உன்னால் சொல்ல முடியாவிட்டால் உனது பெட்டியினையும், புத்தகங்களையும் தூக்கிக் கொண்டு நீ ஓட வேண்டும். நீயாக ஓடாவிட்டால் உன்னைத் துரத்தி ஓட்டம் காட்டுவேன்" என்றார் கோட்டுப் போட்டவர்.

எங்களுக்கு போட்டி முடிவைப் பார்க்க ஆசையாக இருந்தது.

எங்களுக்கு மட்டுமல்ல, அங்கு நின்ற எல்லோருடைய மனோநிலையும் இவ்வாறுதான் இருந்திருக்க வேண்டும்.



போட்டி ஆரம்பமானது.

சவால் விட்ட மனிதர் கூட்டத்தில் நின்றவர்களில் நால்வரை அழைத்து இரகசியமாக காதினிலே எதையோகூறி, தெற்கு, மேற்கு, கிழக்கு, வடக்கு திசைகளிலே தனித்தனியே தூரத்தில் போய் நிற்கச் செய்தார்.

ஒருவரிடம் சொன்ன விடயம் மற்றவர் கேட்க வசதியே இல்லை. அவ்வளவு இரகசியமாக அவர் நினைத்த காரியத்தை ஒவ்வொருவராகச் சொல்லி தனித்தனியே நிற்க வைத்தார். இந்த ஏற்பாடு முடிந்தபின் சாஸ்திரியைப் பார்த்து "இப்பொழுது சொல்லு, நான் நினைத்த காரியமென்ன?" எனக் கேட்டார்.

"ஓர் உயிரைப் பற்றி நினைக்கிறாய்" என்றார் சாஸ்திரி மிக நிதானமாக.

"இல்லை" என்றார் சவால் விட்டவர்.

"ஒரு பொருளைப் பற்றி நினைக்கிறாய்" என்றார் மீண்டும் சாஸ்திரி.

"உயிர், பொருள், இது இரண்டும் இல்லாமல் உலகம் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி வளைத்து நேரத்தைப் போக்காமல் விடயத்தைச் சொல்லு" என்றார் அவர்.

சாஸ்திரி ஏதேதோ உளறினான். அவன் நிலைகுலைந்து விட்டான் என்பது அவன் பேச்சின் தடுமாற்றத்தில் இருந்து புரியக்கூடியதாக இருந்தது.

"உனக்கு இப்போது என்ன நடக்கப்போகிறது என்பதையே உன்னால் புரிந்துகொள்ள முடியாதுள்ள நீ எப்படி என்னுடைய எதிர்காலத்தையும் நினைத்த காரியத்தையும் சொல்ல முடியும்" என்று கூறியவாறு வடதிசையில் நின்றவரை கைகாட்டி அழைத்து "நான் நினைத்திருப்பதை சபையோர் அறிய இவரிடம் சொல்லும்" என்றதும்,

"கல்முனைக் கடல் எப்போது வற்றுமோ அப்போது அவ்விடத்தில் ஒரு வீடு கட்ட நினைத்திருப்பதாக என்னிடம் கூறினார்". என்றார் அவர்.

கூடிநின்றவர்கள் கொல்லெனச் சிரித்துவிட்டார்கள். சாஸ்திரியின் முகத்தில் அசடு வழிந்தது. பின் தெற்கிலே நின்றவரை அழைத்து நான் நினைத்து இருப்பதை சபையோர் அறிய இவரிடம் சொல்லும் என்றதும், முதல் மனிதர் சொன்னது போலவே அவரும் சொன்னார்.

இஃதே போல மற்ற இருவரையும் தனித்தனியே அழைத்து கேட்டபோதும் அவ்வாறே சொன்னார்கள்.

சவால் விட்டவர் "இந்த மேசை யாருடையது?" எனக் கேட்டார்.

பக்கத்துக் கடைக்காரன் "என்னுடைய மேசையென்றான்."

"தூக்கிக் கொண்டு போ" எனக் கட்டளையிட்டவாறு,

உனது பெட்டியையும் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு ஓடிவிடு என்று அதட்டினார் அந்த கோட்டுப் போட்ட மனிதர்.

சாஸ்திரி புத்தகங்களையும் பெட்டியையும் தூக்கிக் கொண்டு நடையைக் கட்டினான்.

"உசைன் விதானையென்றால் உசைன் விதானைதான். அவர் இவ்விடத்திற்கு வந்திராவிட்டால் நம் எல்லோரையும் சாஸ்திரி ஏமாற்றி காசைப் புடுங்கியிருப்பான்" என்றவாறே கலைந்து சென்றனர் கூட்டத்தினர்.

இது நடந்த எத்தனையோ வருடங்களின் பின்தான் எனக்கு கவிஞரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கறிஞருமான அஷ்ர.்.ப் அவர்களுடைய தகப்பனார்தான் உசைன் விதானை என்பது தெரிய வந்தது. தெரிய வந்த அன்றே மேற்கூறிய சம்பவத்தையும், இரை மீட்டிப் பார்த்து "முற்போக்கு சக்தியின் வழித்தொடர் அஷ்ர.்.ப்" என நினைத்துக் கொண்டேன்.

இது நடைபெற்றுப் பல வருடங்களின் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில், டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் ம.்.மூத் அவர்கள் கல்வி மந்திரியாகவும், சுகாதார மந்திரியாகவும் இருந்தபோது 1967ஆம் ஆண்டு சிறிலங்கா இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி யென்றொரு அமைப்பினை உருவாக்கினார்.

இவ்வமைப்பின் முதலாவது தேசிய மாநாடு 1968ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம், 15ம், 16ம் திகதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.சி. அகமது அவர்களின் அனுசரணையோடு கல்முனையிலே நடைபெற்றது. இதற்கு ஏ.எம். சம்சுதீன் அட்வகேற் அவர்களும் துணையாக நின்றார்.



இம்மாநாட்டின் ஒரு அங்கமாக உலகப் பிரசித்திபெற்ற மல்யுத்த வீரர் "காமா" அவர்கள் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட "காமா அரங்கிலே" பேச்சுப் போட்டியொன்று நடைபெற்றது. இப்பேச்சுப் போட்டியில் வயதுக் கட்டுப்பாடின்றி யாரும் பங்குபற்றலாம் என்பது போட்டி விதிகளில் ஒன்று.

பலர் பங்குபற்றிய இப்பேச்சுப் போட்டியில் மூன்று மாணவர்களும் பங்குபற்றினார்கள். ஒருவர் சாஹிரா கல்லூரி மாணவன் ஏ. பீர் முகம்மது. (இவர் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்) அடுத்தவர் உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மாணவன் எம்.எச்.எம். அஷ்ர.்.ப். மற்றவர் சம்மாந்துறை மகாவித்தியாலய மாணவி பரீதா இஸ்மாயில் ஆவார்.

இப் பேச்சுப் போட்டிக்கு கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களும் நானும் பொறுப்பாக இருந்தோம்.

நாங்கள் என்ன கருவை மையமாக வைத்து இப்பேச்சுப் போட்டியினை நடத்தினோமோ, அதற்கு எதிர்மாறான கருத்துக் கொண்ட பேச்சினையே இவ்விரு மாணவர்களும் பேசினார்கள். "இஸ்லாத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோசலிசம்" என்பதுவே பேச்சுப் போட்டியின் கருப்பொருளாகும்.

மாணவர்களில் இருவர் பேசிய பேச்சுக்கள் இஸ்லாத்தில் சோசலிசம் இல்லையென்பதை கருப்பொருளாகக் கொண்டிருந்தன. அவர்கள் எடுத்துக்கொண்ட கருப்பொருளுக்கு ஏற்றவாறு ஆணித்தரமாகவே பேசினர். பேச்சும் கனல் கக்கும் பேச்சாகவே இருந்தது. போட்டியில் பங்குகொண்ட எவரும் இவர்களோடு போட்டியில் நின்றுபிடிக்க முடியவில்லை.

நாங்களும் போட்டி விதிகளில் எங்களின் கருத்தை அடியொற்றியே பேச்சு அமைய வேண்டும் என்று விதியொன்றும் வகுத்துக் கொடுக்கவில்லை. இதனை வேறு ஒருவகையாகக் கூறுவதாயின்,

எங்களின் கருத்தினை எதிர்த்துப் பேசிய இரண்டு மாணவர்களுக்கும் 1ம், 2ம் இடங்கள் கொடுக்காவிட்டால் அங்கு பேசிய யாருக்கும் எந்த இடமும் அளிக்க முடியாது. என்ற அளவுக்கு பேச்சின் தரம் அமைந் திருந்தது.

"அஷ்ரஃப் என்ற இந்த மாணவனின் பேச்சாற்றல் அகில இலங்கையையுமே ஆளுமைப்படுத்தும்" என்று அன்றே நான் நினைத்துக் கொண்டேன்.

டாக்டர் பதியுத்தீன் மஃமூத் அவர்கள் அன்று இந்த மாணவனைப் பற்றி விசாரித்தார். டாக்டர் பதியுத்தீன் மஃமூத் அவர்களுடைய பாணியில் இதனைச் சொல்லுவதாயின், "என்னா பேச்சுப் பேசிறான் இந்தப் பொடிப்பயல், சாதகமாகப் பேசுவது மிச்சம் சொகம், எதிர்த்துப் பேசுறதுதான் கஷ்டம்" என நாசூக்காகக் கூறி மூன்று மாணவர்களுக்கும் பரிசினை வழங்கினார்.

மேற்கூறிய. இந்த இரண்டு சம்பங்களையும் நூலை வாசிக்க முன் யோசிக்க கூறுவதோடு, "போருக்கப்பால்" எனும் இந் நூலினைத் தொகுப்பதற்குக் காலாக அமைந்த வேறுசில விடயங்களையும் இங்கு கோடிட்டுக் காடட விரும்புகின்றேன்.

அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களோடு எனக்குள்ள தொடர்பு அவர் அரசியல்வாதியென்பதை விட, அவர் ஒரு இலக்கியவாதி என்பதிலேயே நெருக்கம் அதிகம் இருந்தது என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உறவினை நாங்கள் இருவரும் மிகப் மிகப் பத்திரமாகப் பேணிக்கொண்டோம்.

இலக்கியவாதிகள் ஒருவருடைய படைப்பை மற்றவர் விமர்சித்தும் விவாதித்தும் தனிப்பட்ட நட்பையே ஊறுபடுத்திக் கொள்வர். அதுவும் வேறுபட்ட அரசியல் கொள்கைகளைக் கொண்டவர்களாயின் விமர்சனமும், விவாதமும் ஒருபக்கச் சார்பாக மாறி, நட்பை உடைத்தெறிந்துவிடும்.

இதற்கு நாங்கள் இருவரும் இடங்கொடுக்கவில்லை. இப்படி இடங்கொடாமைக்குப் பல காரணங்கள் இருந்தாலும், ஒருவரை ஒருவர் கண்ணியப்படுத்த நினைத்தது முக்கியமான காரணமாக இருக்கலாம்.

அவர் சட்டத்தரணியாக கல்முனைக் கோட்டிலே வேலை பார்த்தபோது சந்திக்கக் கிடைத்தால் சிரித்துக் கொண்டே "தினகரனில் உங்கள் சிறுகதையைப் படித்தேன்" என்றோ, அல்லது "உங்களின் கவிதையைப் படித்தேன்" என்றோ கூறி "நன்றாக இருந்தது" என்பார்.

நானும் பகரமாக "மிக்க நன்றி" என்று சொல்லிக் கொள்வேன்.



சிலவேளைகளில் நான் அவரைக் கண்டால் தினகரனில் உங்கள் கவிதை படித்தேன். நன்றாக எழுதியுள்ளீர்கள் என்று கூறுவேன்.

அதற்கு அவர் "தேங்ஸ்" என்று கூறிவிட்டு வசதிப்பட்டால் பின்னேரம் வீட்டுப் பக்கம் வாருங்கள் என்று கூறிச் செல்வார்.

எங்களுக்குள் நெருக்கம் அதிகமாகி, அவரையும் அவரது பேச்சினையும் அங்கம் அங்கமாக இரசிக்கத் தொடங்கியது அண்மைக்காலத்திலேயே.

அதாவது,

நான் கல்விப் பணிப்பாளர்.

அவர் அமைச்சர்.

அமைச்சர் என்ற வகையில் அவர் எனது நிர்வாகத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு உத்தியோக விஜயத்தை மேற்கொள்ளும் போதெல்லாம் நானும் கூடவே செல்வேன்.

அதனால்,

சம்பந்தப்பட்ட பாடசாலை நிகழ்வுகளின்போதும், எனது நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு விழாக்களின் போதும் அவர் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டால் என்ன என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது.

இந்த எண்ணம் தோன்றுவதற்கு மேலும் ஒரு காரணம் துணை புரிந்தது என்பேன்.

அ.்.து,

பாடசாலைகளிலும், எனது நூல் வெளியீட்டு மேடைகளிலும் பேசிய பேச்சுக்கள் அரசியல் கலப்பற்று, இன, மத, மொழிகளினூடாக போருக்கப்பால் சென்று மனிதநேயத்தை தேடியது அவரது பேச்சுக்கள்.

இதனை இப்படியும் கூறலாம். அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் மற்ற அரசியல்வாதிகளைப் போன்று காலநேரம், இடம் தெரியாமல், மேடைகளில் அரசியல் பேசுபவர் அல்ல. மாணவர் மத்தியில் எவ்வாறு பேச வேண்டும், இலக்கியக் கூட்டங்களிலே எவ்வாறு பேச வேண்டும், அரசியல் கூட்டங்களிலே எவ்வாறு பேச வேண்டுமென்று நன்றாக அறிந்து வைத்துக்கொண்டுதான் பேசுவார்.

அதனால்தான் அவரது பேச்சுக்கள் அலுப்புத் தட்டாமல் எத்தனை மணித்தியாலங்கள் பேசினாலும் கவர்ச்சி குன்றாமல், கேட்போரை ஆடாமல் அசையாமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கும் சக்திபடைத்ததாக இருந்தன.

நான் இங்கு தொகுத்துள்ள எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களுடைய பேச்சுக்களை மற்ற அரசியல்வாதிகளும் படித்து தங்களையும் அதுபோல் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என நான் நினைத்தேன். இதுவே முக்கியமான காரணம்.

இ.்.தேபோல தென்கிழக்கிலேயுள்ள மாணவர்கள் அவரது பேச்சினைக் கேட்டுப் பயன் அடைந்தது போல அகில இலங்கையிலும் உள்ள தமிழ்பேசும் மாணவர்கள் பயனடைய வேண்டுமென்பது எனது மற்றுமொரு காரணம்.

மேலும்

எனது நூல் வெளியீட்டு மேடைகளில் அவர் பேசிய பேச்சுக்கள் தரமான இலக்கியக் கருத்துக்களாக இருந்தன. அதனால் இலக்கியவாதிகளுக்கும் இது பிரயோசனப்படுமென நினைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நினைப்பினைச் செயல்படுத்த காலதாமதமாகி விட்டது என்னவோ உண்மைதான். செயல்படுத்த ஆரம்பித்த போது எதிர்பாராத பல பிரச்சினைகள்.

மேற்படி எண்ணமுடைய நான் அவரது பேச்சுக்களை ஒலிப்பதிவு நாடாக்களில் ஒலிப்பதிவு செய்து வைத்திருந்திருக்க வேண்டும்.

அப்படி எதுவும் நடைபெறவில்லை.

ஆனால்

பேச்சுக் குறிப்புக்களை பத்திரப்படுத்தி வைத்திருந்தேன்.

வைத்த இடம் எந்த இடம் என்று தெரியாது அந்தரப்பட்டுவிட்டேன்.

இ∴து ஒருபுறமிருக்க,

எழுத்தென்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி.

இது பேச்சுத் தொகுப்பானபடியால் அவர் பேசும் பாணியிலே எழுதவே வேண்டியிருந்தது. அதனாலும் ஒரு சில சிரமங்கள்.



இச்சிரமங்களையெல்லாம் பாராது அவரது பேச்சினைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென்ற எனது எண்ணத்தினை அசைக்க முடியவில்லை. எனது இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களை சந்தித்து நான் வைத்திருந்த குறிப்புக்களை அவரிடம் ஒப்படைத்தேன்.

படித்துப் பார்ப்பதாகக் கூறி வாங்கிக் கொண்டார்.

ஒரு மாதத்தின் பின் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக் காரியாலயமான "தாருஸ்ஸலாத்தில்" என்னைச் சந்தித்த அவர் மீண்டும் என்னிடம் அவைகளைக் கொடுத்து இதனை "புதிய வெளிச்சங்கள்" ஊடாக வெளியிடுவோம்.

இதனை "பௌஸரிடம்" கொடுங்கள், சகல வெளியீட்டு வேலைகளையும் அவரே செய்வார் என்றார்.

பௌஸர், என்பவர் "மூன்றாம் மனிதன்" சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். அவருக்கு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக் காரியாலயத்தில் கம்பியூட்டர் வசதியோடு ஒரு இடம் ஒதுக்கிக் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புதிய வெளிச்சங்கள்" வெளியீட்டுப் பணியினை மேற்கொள்ள ஆவன செய்திருந்தார். அஷ்ர∴ப் அவர்கள்

"அஷ்ர∴ப் கெட்டிக்காரர்" என நினைத்துக் கொண்டு பௌஸரிடம் அவைகளைக் கையளித்தேன். **(அஷ்ர∴ப் அவர்களுக்கு ஏசுவதற்கென்றே பத்திரிகையொன்றை நடத்தியவர் பௌஸர்)**

வேலைகள் துரிதமாக நடைபெறாவிட்டாலும், நத்தை வேகத்தில் நகர்ந்தது எனலாம்.

ஆனால் இறைவன் நாட்டம் வேறு வகையாக இருந்ததை யார் அறிவர். "ஹெலி" விபத்தில் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்கள் இறையடி எய்தி விட்டார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் - இறப்பு யாருக்கும் உண்டு)

பௌஸரும் தாருஸ்ஸலாத்தில் இல்லை. வெளிநாடு சென்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.

நான் கொடுத்த ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்பதை என்னால் அறிய முடியவில்லை.

வருடங்கள் உருண்டோடின

பல வருடங்களின் பின் மீண்டும் ஒரு எண்ணம் தோன்ற என்னிடம் கிடந்த மூலப்பிரதிகளைத் தேடியெடுத்து அவைகளில் ஏற்பட்ட குறைகளை நிறைவு செய்வதற்காக பல பாடசாலைகளில் ஏறி இறங்கி ஓரளவு பூர்த்தி செய்து கொண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் எனது இனிய நண்பருமான அல்ஹாஜ் எம்.ரி. ஹஸன் அலி எம்.பி. அவர்களிடம். நடந்தவற்றையெல்லாம் கூறி இதனை ஒரு தடவை படித்துப் பார்க்கும் படி கொடுத்து விட்டு வந்தேன்.

இரண்டு கிழமையின் பின் அவரோடு காரில் பயணித்த போது, "நான் தந்தவைகளை வாசித்தீர்களா?" எனக் கேட்டேன் "மேலால் ஒரு தரம் படித்துப் பார்த்தேன். ஆழமாகப் படிக்கக் கிடைக்கவில்லை நீங்கள் எழுதினால் அதில் என்ன குறை இருக்கப் போகிறது" எனக் கூறியவாறு அவரது சூட்கேசைத் திறந்து குறிப்புகளை என்னிடம் ஒப்படைத்து, நூலாக்க ஆவன செய்யுங்கள் எதிர்வரும் மே மாதம் மலேசியாவிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியீடு செய்வோம். என்றதும் எனக்கு உத்வேகம் பிறந்தது.


வேலைகளைத் துரிதப்படுத்தினேன்.

இறைவன் நாட்டப்படி நூலாகி மலேசியாவில் வெளியீடு காண்கிறது.

இந்த வெளியீட்டோடு 2002.10.22ம், 23ம், 24ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சர், கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சர் அல் ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்களின் இலக்கிய பாரம்பரியம் பற்றி நான் எழுதிய "வேர்" எனும் நூல்வெளியீட்டு இனிய நினைவுகளும் சேர்ந்த மனத்திருப்தியோடு,

011.05.20





**மருதூர் வெளியீட்டுப்பணிமனை**
**436, பழைய சந்தை வீதி,**
**சாய்ந்தமருது - 03**
**கல்முனை, சிறீலங்கா**
**தொலைபேசி : 077 5000660**

**74/6, முகைதீன் மஸ்ஜித் வீதி,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி : 011 2334218**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்கள்


1. வாசிக்க முன்
யோசிக்க

2. முத்தமிழும்
மூன்று சமூகங்களும் 13.06.1986

3. ஆங்கிலம் கற்க
அக்கறை வேண்டும். 30.01.1995

4. அழியக்கூடிய உடலும்
அழியாத ஆத்மாவும் 06.03.1995

5. கிறிஸ்தவ திருச்சபையினர்
கல்விக்காற்றிய தொண்டு 06.04.1995

6. விமர்சனங்கள்
பக்கச்சார்பாக அமையக்கூடாது 29.07.1995

7. ஆசிரியத் தொண்டு
அளப்பரியது 13.07.1996

8. சுவர் இருந்தால்தான்
சித்திரம் வரையலாம் 23.05.1997

9. போருக்கப்பால்
மனிதநேயம் தேடல் 31.08.1997

10. மொழி என்னும் ஊடகம்
மனித நேயத்தை வளர்க்கிறது 13.03.1998

11. சுகவாழ்வைச் சொல்வன
சுக இலக்கியங்களே 23.03.1998

12. திருப்பு முனையும்
தீர்க்கமான முடிவுகளும் 10.04.1998

13. ஏழைகளுக்கு தொண்டு செய்பவன்
இறைவனுக்கு தொண்டு செய்கிறான் 30.06.1998

14. மொழிகளின் முக்கியத்துவமும்
பேச்சுக் கலையும்

15. வாசித்த பின்
யோசிக்க 26.07.2000





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழும்
# மூன்று சமூகங்களும்

| | | |
|---|---|---|
| இடம் | : | சம்மாந்துறை அல்-மர்ஜான் வித்தியாலயம் |
| விடயம் | : | தமிழ் மொழித் தின விழா,<br>கல்முனை மாவட்ட மட்டம் |
| தலைமை | : | ஜனாப் ஐ.எம். இஸ்ஸதீன் |
| திகதி | : | 13-06-1996 |

இந்நிகழ்விலே கலந்து சிறப்பிக்க வந்துள்ள கல்விப் பணிப்பாளர்களே! அதிபர்களே!

உலமாப் பெருமக்களே!

ஆசிரியர்களே!

மாணவர்களே!

பொதுமக்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உடன்பிறப்புக்களே! எல்லோருக்கும் எனது சலாமும் வணக்கமும் உரித்தாகட்டும்.

இங்கு கூடி இருக்கின்ற நாங்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, இந்துக்களாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், எமது எல்லோரது தாய்மொழியும் தமிழாக இருப்பதனால், எம்மிடையே ஒரு புரிந்துணர்வு நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

நீண்ட கால வரலாற்றினையும், இலக்கியப் பாரம்பரியத்தினையும் கொண்ட, ஒரு மொழியினால் பிணைக்கப்பட்டவர்கள் நாங்கள் என எண்ணும்போது, மனம் மகிழ்வடைகிறது.

எமது கலை, கலாச்சாரங்களும், ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. சில கலாச்சாரங்கள், எது யாருடைய கலாச்சாரம் என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவு இரண்டறக் கலந்தும் காணப்படுகின்றன.

எமது முச்சமூகங்களினதும் பிரிக்க முடியாத ஒற்றுமைக்குக் காரணம் மதக்கோட்பாடுகள் என்பதைவிட மொழியும் கலாசாரங்களுமே என்று என்னால் திட்டவட்டமாகக் கூற முடியும்.



கிழக்கிலே வாழ்கின்ற இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமூகங்களான முச்சமூகங்களும் தமிழ் மொழிக்கு இலக்கியப் பங்களிப்பினைச் செய்துள்ளோம்.

இதற்கு உதாரணமாக, சீறாப்புராணத்தினையும், இரட்சண்ய யாத்திரிகத்தையும், பெரிய புராணத்தினையும் கூற முடியும்.

இம்மூவகை சமயச் சார்புடைய இலக்கியத்தினையும், நாம் மூன்று சமூகத்தவர்களுமே படித்துள்ளோம். இதனால்தானோ என்னவோ மூன்று சமூகத்தவர்களும், ஒரு காலத்தில் மத வேற்றுமையின்றி ஒற்றுமையாக வாழ்ந்துள்ளோம்.

இ∴து இவ்வாறிருக்க, இன்று தமிழ் மொழித்தின விழா. சிங்கள மொழித்தின விழா, ஆங்கில மொழித்தின விழா என அரசு முக்கியத்துவம் கொடுத்து பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, ஏன் இவ்விழாக்களை ஊக்கப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும், பாடசாலை மட்டமென்றும், கோட்ட மட்டமென்றும், வலய மட்டமென்றும், மாவட்ட மட்டமென்றும், மாகாண மட்டமென்றும், தேசிய மட்டமென்றும், மாணவர்களிடையே பல்வகைப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளித்து உற்சாகமூட்டி ஊக்கப்படுத்துகின்றது.

மொழித்திறனை, ஆற்றலை மாணவர்கள் மத்தியில் வளர்த்தலே காரணம் எனச் சுருக்கமாகச் சொல்லிவிட்டாலும் இதனடியிலே ஆழமான-அர்த்தபுஷ்டியுள்ள கருத்து ஒன்று உள்ளதனையும் நாம் மறந்துவிடக் கூடாது. மாணவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வகையான திறமைகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்களது திறமைகளை இனங்காண வேண்டியதும், அதனை ஊக்கப்படுத்தலும் ஒரு நோக்கமாகும்.

அடுத்தது,



மாணவன் எந்தப் பாடத்தைப் படிக்க வேண்டியிருந்தாலும், அதாவது, விஞ்ஞானமாக இருந்தாலும் சரி, கணிதமாக இருந்தாலும் சரி, புவியியலாக இருந்தாலும் சரி, அவன் அதனை தமிழ் மொழியினூடாகவே கற்க வேண்டியுள்ளது. இ.்.தே வேளை தமிழ் மொழியிலேயே பரீட்சையும் எழுத வேண்டியுள்ளது.

தமிழ் மொழியை நன்றாக வாசிக்க எழுதத் தெரிந்தால்தான் எப்பாடமாயினும் சரியாக தனது மனக்கருத்தைப் பரீட்சையின்போது எழுத முடியும். இதனால்தான், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களின் ஆற்றலை வளர்த்தெடுக்க தமிழ் மொழித்தின விழாக்கள் அத்தியாவசியமாகின்றன.

வாசிப்பாற்றலையும், எழுத்தாற்றலையும், பேச்சுத்திறனையும், கவிதை, சிறுகதை போன்ற படைப்பிலக்கிய ஆற்றல்களையும் விருத்தி செய்ய இப்படிப்பட்ட மொழித்தின விழாக்கள் பேருதவி செய்யும் என்பதனாலேயே அரசு இப்படிப்பட்ட விழாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிக்கின்றது. இங்கு ஒரு மாணவன், போட்டியிலே பரிசு பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கவிதையை வாசிக்கும்போது, வெட்கப்பட்டதோடு, தன்னை மன்னிக்குமாறும் கேட்டுக் கொண்டார். அது காதல் பற்றிய கவிதையாக இருந்ததினால் தன்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டார் போலும். இது வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமல்ல. அத்தோடு மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமுமில்லை.

எந்தவொரு கவிஞனும் காதல் கவிதை எழுதாமல் கவிஞனாகி இருக்க மாட்டான் என்பதை என்னால் திட்டமாகக் கூற முடியும்.

நான் கூட ஆரம்பத்தில் காதல் கவிதை எழுதியவன்தான்.

உலகப் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞன் "லோட் பைரன்", பிரஞ்சுக் கவிஞன் "ஷெல்லி", தமிழ்க் கவிஞன் "கண்ணதாசன்", இன்றைய வைரமுத்து, பாரசீகக் கவிஞன் "பிர்தௌசி", "உமர்கையாம்" போன்ற சகல கவிஞர்களும் காதல் கவிதைகளை இளம் வயதிலேயே எழுதியவர்களே!

இதில் வெட்கப்படுதற்கு என்ன இருக்கிறது.

இங்கு மேடையேற்றப்பட்ட நாடகங்களை மிக உன்னிப்பாக நான் கவனித்தேன். இங்கு நடிக்கப்பட்ட ஒரு நாடகத்தின் கருவிலே எனக்கு உடன்பாடில்லை.

கருவிலே உடன்படுவதும், உடன்படாதிருப்பதும் வேறு விடயம். ஆனால், அந்த நாடகத்திலே நடித்த நடிகர்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

பாத்திரங்களை உணர்ந்து பாத்திரங்களாகவே மாறி, சிவாஜி கணேசனைப் போன்று, அல்லது ரஜனிகாந்தைப் போன்று, கொப்பி பண்ணி நடிக்காமல், மாணவர்களுக்கே உரித்தான பாணியில் அப்பாத்திரங்களை ஏற்று நடித்தார்கள். இயற்கையான நடிப்பு என்பதனால், அவர்களை நான் பாராட்டுகின்றேன். இவ்வளவு திறமையான மாணவர்கள், எங்கள் மத்தியிலே இருக்கிறார்களே என்பதையெண்ணி நான் பெருமைப்படாமல் இருக்க முடியாது. அவர்களுக்கும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலய மட்டத்திலான போட்டிகளின்போது, முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகளே இங்கு இடம்பெற்றதாக, இவ்விழா அமைப்பாளர்கள் கூறினார்கள்.

இந்நிகழ்ச்சிகள் மாகாண மட்டத்தில் வெற்றி பெறும்போது, தேசிய மட்டத்தில் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறினார்கள்.

இங்கு மேடையேற்றப்பட்ட வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல் போன்ற நிகழ்ச்சிகள் அகில இலங்கை மட்டத்தில் வெற்றி பெறும் வாய்ப்புக்களைக் கொண்டதாகத் தரமாக அமைந்துள்ளது என்று கூறிக்கொள்வதோடு, வெற்றி பெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(குறிப்பு: மேற்குறிப்பிட்ட வில்லுப்பாட்டு அக்கரைப்பற்று மத்திய மகாவித்தியாலய மாணவர்களால் மேடையேற்றப்பட்டு அகில ஈலங்கை ரீதியாக முதலிடம் பெற்றது என்பது ஈங்கு குறிப்பிடத்தக்கது.)**

எனவே, இப்படியான போட்டிகள் மூலமும், விழாக்களின் மூலமும், மாணவர்களின் படைப்பிலக்கியத் திறனையும், கலை, கலாச்சார வெளிப்பாட்டுத் திறனையும், மேலும் மேலும் வளர்க்க முயல வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, இவ்விழாவுக்கு என்னையும் அழைத்து கௌரவித்தமைக்கு இப்பிராந்திய கல்வி உத்தியோகத்தர்களுக்கும், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியினைக் கற்பதில் நாம் அக்கறை காட்ட வேண்டும்.



| | |
|---|---|
| இடம் | : கல்முனை மஃமூத் மகளிர் கல்லூரி |
| தலைமை | : ஏ.எச்.எம். பஸீர், அதிபர் |
| விடயம் | : பாடசாலை மட்ட ஆங்கில மொழித் தினம் |
| திகதி | : 30.01.1995 |

இப்பாடசாலையின் அதிபர் ஜனாப் ஏ.எச்.எம். பஸீர் அவர்களே!

ஆசிரியர்களே!

உலமாப் பெருமக்களே!

பெற்றோர்களே!

மாணவியர்களே!

கல்வித் திணைக்கள உத்தியோகஸ்தர்களே!

நம் எல்லோருக்கும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நடைபெற்ற ஆங்கில மொழித்தின நிகழ்வுகளைக் கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்பினை அளித்த இறைவனுக்கே எல்லாப் புகழும், அல்ஹம்துலில்லாஹ்.

இங்கு பர்தா அணிந்து மண்டபம் நிறைந்து காணப்படுகின்ற மாணவியர் கூட்டத்தினைக் காணும்போது, உண்மையிலேயே என் உள்ளமெலாம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிகின்றது. உடலெல்லாம் புல்லரிக்கின்றது.

இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன் எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆண், பெண் வித்தியாசமின்றி சகலரும் கல்வியைக் கற்க வேண்டுமெனக் கூறியுள்ளார்கள்.

ஆனால், நாங்களோ இங்கு, ஆண், பெண் வித்தியாசமின்றி கல்வியிலே பின்தங்கியவர்களாகவே இருந்தோம். இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் கூட எமது பெண்களுக்கு கல்வி எட்டாக் கனியாகவே இருந்தது.



அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில பெண்பிள்ளைகளே கல்வி கற்றவர்களாக இருந்தார்கள். ஆனால், இன்றோ நிலைமை மாற்றமடைந்து ஒவ்வொரு வீட்டிலும் படித்த பெண்கள் இருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது, உண்மையிலேயே எனது மனம் மகிழ்ச்சியடைகிறது. ஒரு காலத்தில் பெண் கல்வியில் எமது சமூகம் அக்கறையில்லாதிருந்தது. சற்றுக் காலம் சென்ற பின் பெண்கள் கையெழுத்து வைக்கக் கற்றுக் கொண்டால் போதுமானது என்று எண்ணினார்கள்.

இன்னும் சற்றுக் காலம் சென்ற பின் பெண்கள் படித்து உத்தியோகம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. எழுத வாசிக்கத் தெரிந்திருந்தால் போதுமானது. அதாவது, அறிவுக்கு படித்தால் போதுமானது எனக் கருதினார்கள்.

ஆனால் இன்றோ நிலைமை முற்றிலும் மாறி ஆண், பெண் என்ற வித்தியாசம் இன்றி சகலரும் படிக்கின்ற காலம் வந்துவிட்டதை நினைத்து எம்மால் சந்தோஷப்படாமல் இருக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இப்பாடசாலையில் படித்த மாணவியர்கள் சிலர் டாக்டர்களாக இருக்கிறார்கள் என்ற செய்தி என்னை மிக்க மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

ஒரு அறையில் பாதி வெளிச்சமும், பாதி இருட்டாகவும் இருக்கின்ற நிலையிலே அந்த அறையினை நாம் வெளிச்சமுள்ள அறையாகக் கொள்வதில்லை.

இ∴தே போலத்தான் எமது முஸ்லிம் சமூகத்தின் சரிபாதியான பெண் சமூகம் கல்வியிலே பின்தங்கி இருந்தால் எவ்வாறு எமது சமூகம் படித்த சமூகமாகக் கொள்ள முடியும். எனவேதான், பெருமானார் (ஸல்) அவர்கள் ஆண், பெண் வித்தியாசம் இன்றி இருபாலாருக்கும் கல்வி அவசியம் என்றார்கள். பெருமானாரின் இந்தக் கருத்தினை அடியொற்றி இப்பாடசாலை யாருடைய பெயரைத் தாங்கி வளர்ந்து வருகின்றதோ அப்பெயருக்குரிய பெரியார், முன்னைநாள் கல்வி மந்திரி காலஞ்சென்ற டாக்டர் பதியுத்தீன் ம∴மூத் அவர்கள் அடிக்கடி மேடைகளிலே கூறிவந்த கருத்தினை இங்கு ஞாபகமூட்டல் பொருத்தமென நினைக்கின்றேன்.

"ஒரு ஆணுக்குக் கல்வி கற்கின்ற வாய்ப்பினை அளிப்பது ஒரு தனிமனிதனுக்குக் கல்வி கற்கின்ற வாய்ப்பினை அளிப்பதாகவே கொள்ள வேண்டும்.

ஆனால் ஒரு பெண்ணிற்கு கல்வி கற்கின்ற வாய்ப்பினை அளிப்பது ஒரு சமூகத்திற்குக் கிடைக்கின்ற வாய்ப்பாகவே கொள்ள வேண்டும்" எனக் கூறினார்.

ஒரு பெண் கல்வி கற்றவளாக இருந்தால் அவள் பெற்றெடுத்த பிள்ளைகள் கல்விச் சூழலிலே வளர்வார்கள் என்பதுதான் இதன் பொருள்.

கல்வியைக் கற்பதற்கு கல்விச்சூழல் அமைய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

அதுவும் ஆங்கிலக் கல்வி இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை மிகமிக முக்கியமான ஒரு தேவையாக நான் கருதுகின்றேன்.

ஆங்கிலக் கல்வியைக் கற்ற ஒருவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவர் தன்னை ஒரு உலகப் பிரஜையாக மாற்றிக்கொள்ள வசதியேற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இன்று அதிகமான அறிவியல் நூல்களும், தொழில்நுட்ப நூல்களும், விஞ்ஞான நூல்களும் ஆங்கில மொழியில்தான் இருக்கின்றன. இதனை இன்னும் விளக்கமாகக் கூறுவதாயின், தமிழிலே குர்ஆன் மொழிபெயர்ப்பு வருவதற்கு முன் ஆங்கிலத்தில் பல மொழிபெயர்ப்புக்கள் வந்துவிட்டன.

அத்தோடு,

எமது முன்னோரின் அரபு இலக்கியங்கள் பல உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லாதவாறு ஆங்கில மொழியிலேயே மொழிபெயர்ப்புக்களாக வெளிவந்துள்ளன.

எனவேதான், ஆங்கில மொழியைப் படித்துக் கொண்ட ஒருவர் எமது மத மொழியிலே உள்ள அரபு இலக்கியங்கள் பலவற்றை வாசித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெறக்கூடியவராகின்றார்.

உதாரணத்திற்குப் பின்வருவனவற்றை என்னால் கூற முடியும்.



உலகப்புகழ் பெற்ற பாரசீகக் கவிஞர் உமர்கையாம் அவர்களுடைய “ருபயாத்” கவிதைகளை நாம் தமிழிலே படிக்க மூலகாரணமாக இருந்தது ஆங்கில மொழிபெயர்ப்பே.

பாரசீக மொழியில் இருந்து இதனை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார்கள்.

இந்த ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்தே தமிழ் மொழிபெயர்ப்பு வந்தது. ஆங்கிலம் தெரிந்த ஒருவரால் உருது, பாரசீகம், அரபு போன்ற எம்மவர்களின் இலக்கியச் செல்வங்கள் பலவற்றையும், சிந்தனைக் கருத்துக்கள் பலவற்றையும் ஆங்கிலத்தில் படித்து இன்புற முடியும். இம்மேடையில் பேசிய இப்பாடசாலை மாணவியின் ஆங்கிலப் பேச்சினைக் கேட்டு நான் புளகாங்கிதம் அடைந்தேன்.

எவ்விதமான சலனமும் இன்றி இயற்கையான மொழி ஆளுமையோடு, சரியான ஆங்கில உச்சரிப்போடு கூடிய ஒரு அழகான பேச்சினை கேட்க முடிந்தது.

ஆங்கில மொழியினைக் கற்பதில் எமக்கிருந்த தடைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாற்றமும், ஆங்கில நாகரிகத்தைப் பின்பற்றலும் காரணமாக இருந்திருக்கலாம்.

ஆங்கில மொழியினைக் கற்ற ஒரு சிலர் ஆங்கில நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றி எமது கலை, கலாசார மதக் கோட்பாடுகளையும் மீறி நடக்கலாயினர். இதனைக் கண்ட எமது முன்னோர்களான மார்க்க அறிஞர்கள் வருமுன் காப்போனாகி ஆங்கில மொழியினைக் கற்பதனையே தடைசெய்தனர்.

இன்றும் கூட இந்த விடயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டியவர்களாகவேயுள்ளோம். ஆங்கிலம் கற்றவர்கள் நாங்கள் என்ற இறுமாப்போடு எமது கலை, கலாசாரங்களை மறந்து மத அனுஷ்டானங்களைத் துச்சமென நினைத்து மேடைகளில் ஆட்டம் போடுவதையும், ஆண், பெண் வித்தியாசம் இன்றி அந்நிய ஆடவர்களோடு கூச்சமின்றி கைகோர்த்துத் திரிவதையும் நாம் கண்டிப்பாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நாம் உலகளாவிய ஒரு சமூகம். எமது கலை, கலாச்சாரங்களெல்லாம் உலகளாவியவை.

அரேபியர்கள் எங்கள் மூதாதையர்கள். இவர்கள் இலங்கைக்கு கிறிஸ்து பிறப்பதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் வந்தவர்கள். இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் ஏராளமுண்டு.

இப்படியான நீண்டகால வரலாற்றினையும், கலை, கலாசாரங்களையும் வாழ்க்கைத் திட்டமான மதக்கோட்பாடுகளையும் கொண்ட நாம் ஒரு சிறு காலம் சோம்பிய நிலையில் கழித்துவிட்டோம்.

கல்வியிலே பின்தங்கியமை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இனிமேல் இப்படியான பிழைகளை விடாது பார்த்துக்கொள்ள வேண்டியது எமது சகலரினதும் கடமையாகும் எனக் கூறி எமது பேச்சினை முடித்துக்கொள்ள முன் மீண்டுமொரு முறை சகலருக்கும் குறிப்பாக இப்பாடசாலை அதிபருக்கும் இந்நிகழ்ச்சியை மிகத் திறமையாக ஒழுங்கு செய்த ஆங்கில ஆசிரியர் குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியக்கூடியஉடலும் அழியாத ஆத்மாவும்

| | | |
|---|---|---|
| இடம் | : | உவெஸ்லி உயர்தர பாடசாலை |
| தலைமை | : | திரு. பி. வெங்கடாசலம், அதிபர் அவர்கள் |
| திகதி | : | 06-03-1995 |

எல்லாம் வல்ல இறைவனுக்கே புகழனைத்தும். அல்ஹம்துலில்லாஹ்.
அஸ்ஸலாமு அலைக்கும். வணக்கம்.
இப்பாடசாலையின் அதிபர் திரு. வெங்கடாசலம் அவர்களே!
உலமாப் பெருமக்களே!
ஆசிரியர்களே!
மாணவர்களே!
பெரியார்களே!
பெற்றோர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியலாளர்களே! எல்லோர் மீதும் இறைவன் சாந்தியும், சமாதானமும் உண்டாக்குவானாக.

நான் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற உரிமையோடும், உணர்வோடுமே பேசுகின்றேன். நான் இந்த அரசின் முக்கியமான ஒரு அமைச்சர் என்றோ, முஸ்லிம் காங்கிரசின் தேசிய தலைவரென்றோ இங்கு பேசவில்லை.

நான் அமைச்சராவதற்கும், முஸ்லிம் காங்கிரசின் தலைவனாவதற்கும், எனக்குப் பயிற்சியளித்து என்னைப் பக்குவப்படுத்தி, எல்லாவற்றிற்கும் மேலாக, இன, மத மொழிக்கப்பால் என்னை இட்டுச் சென்று நல்ல மனிதனாக உருவாக்கியது இப்பாடசாலையே!

அதற்காக, இப்பாடசாலையின் எதிர்கால நன்மைக்காக, என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய நான் சித்தமாகவும் உள்ளேன்.

இப்பாடசாலையில் நான் கற்றுக் கொண்ட நல்ல பழக்கங்களான பெற்றோரைக் கனம் பண்ணுதல், பெரியோரை மதித்தல், ஆசிரியர்களை கௌரவப்படுத்துதல், கடமையில் கண்ணாயிருத்தல், சமூகத்திற்கும் மக்களுக்கும் சேவை செய்தல் போன்றவையே எனது இன்றைய நல்வாழ்வுக்கு காரணமாக அமைந்து என்னை நேரான பாதையில் இட்டுச் செல்கின்றன.

எனக்குக் கல்வியூட்டிய ஆசிரியர்களை என்னால் என்றுமே மறக்க முடியாது. என்னை நல்லவனாகவும், வல்லவனாகவும் ஆக்கிய இப்பாடசாலையின் ஆசிரியர்கட்கு என்றென்றும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் இப்பாடசாலையில் படிக்கின்ற போது இயங்கிய பாராளுமன்றமே என்னை ஓர் அரசியல்வாதியாக ஆக்குவதற்கு வித்திட்டுப் பயிற்சியும் அளித்தது எனலாம்.

நான் சட்டக்கல்லூரிக்குப் போகும்வரை இப்பாடசாலையே எனக்கு வழிகாட்டியாக இருந்தது. என்னை இயற்கையை இரசிக்க வைத்து காதல் உணர்வினையூட்டி, என்னைக் கவிஞனாக்கியதும் இப்பாடசாலையே!

நான் இன்று உங்கள் மத்தியிலே இன ஒற்றுமையை வலியுறுத்த வேண்டிய கடமைப்பாடுடையவனாக உள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் படித்த இப்பாடசாலை இனஒற்றுமையை நன்கு என் உள்ளத்திலே வேரூன்ற வைத்துள்ளது. நான் சட்டத்தரணியாகக் கல்முனையிலே வேலை பார்த்தபோது எனது குடியிருப்பை கல்முனை தமிழ் நண்பர்கள் மத்தியில் ஆக்கிக் கொண்டேன்..... அதனால் நான் கல்முனையில் இருந்து கொழும்பிற்கு அகதியாக ஓடிய முதலாவது ஆள் மட்டுமல்ல ஓடியபோது என்னால் எதனையும் எடுத்துச் செல்லவும் முடியவில்லை.

காலங்காலமாக, அன்போடு நேசித்து சேர்த்த விலை மதிக்க முடியாத நூல்கள் பலவற்றையும்,

அதனைப் போன்ற அரும்பொருட்கள் பலதையும் விட்டுச் சென்றேன். எனது வீடு அழிபாட்டிற்குள்ளாகியது.

மனைவியையும், மகனையும் அழைத்துக் கொண்டு கொழும்பிற்கு ஓடியபோது எனது வீட்டைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுமாறு எனது தமிழ் நண்பர் ஒருவரிடமே கூறிச் சென்றேன். எனது வீடும், பொருட்களும் உடைந்து அழிபாட்டிற்கு மத்தியில் கிடந்தாலும், எனது இன ஒற்றுமையும், நட்பும் உடைவேற்படாது அப்படியே கட்டியாகவே இருந்தது. என்னால் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வரும் கட்சியின் பெயர் "முஸ்லிம் காங்கிரஸ்" என்றிருப்பதால், அது இனவாதக் கட்சியென்று பொருளாகிவிடாது.



எனது மதிப்பிற்குரிய, நான் என்றென்றும், புகழ்ந்து பேசுகின்ற, காலஞ்சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் "தமிழரசுக் கட்சி"யென்று ஒரு கட்சியினை ஆரம்பித்து வளர்த்து வரவில்லையா? அதில் பல முஸ்லிம்கள் அங்கத்தவர்களாகி முக்கியமான பதவிகளை வகிக்கவில்லையா? இதனை இனவாதக் கட்சியென்று கருதமுடியுமா? அ∴தே போல, ஏன் இன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் தமிழ்ச் சகோதரர்கள் சேரக் கூடாது. அதற்கான அழைப்பினை இன்று இம்மேடையில் பகிரங்கமாக விடுக்க விரும்புகின்றேன்.

இந்த அழைப்புக்கூட இன ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு அழைப்பென்றே நான் கூறுவேன்.

மீண்டும் இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் ஒரு களமாக ஏன் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையை நாம் ஆக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்பது இன்னும் உணரப்படவில்லை.

உடல் அழியக்கூடியது, ஆத்மா அழிவில்லாதது. பகவத் கீதையும் இதனையே கூறுகின்றது.

எனவேதான், இப்பாடசாலை ஆத்ம சக்தியுள்ள மனிதர்களை உற்பத்தி செய்யும் இடமாக மாற வேண்டுமென நான் கனவு காண்கின்றேன். எதிர்காலத்தில் நல்ல மனிதர்களை எதிர்பார்க்கும் நாம் மாணவப் பருவத்திலேயே அதற்கான விதையை விதைக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு மரத்தின் விதையை நாம் பூமியுள் புதைத்தால் அது உடனேயே முளைத்து மரமாகிப் பூத்துக் காய்ப்பதில்லை. அது முளைத்து மரமாகிப் பூத்துக் காய்த்துப் பழுப்பதற்கும், அதனை நாம் அனுபவிப்பதற்கும் பல வருடங்கள் தேவைப்படுகின்றன.

இ∴தே போலத்தான் மாணவர்கள் உள்ளங்களிலே இன ஒற்றுமைக்கான விதைகளையும், மனிதப் பண்புகளையும், நல்ல விழுமியங்களையும் விதைக்க வேண்டும். அவை வளர்ச்சி பெற்றுப் பலன்தர பல வருடங்கள் எடுத்தாலும் பாதகமில்லை. என்றோ ஒரு நாள் நாம் அதன் பலனை அனுபவிக்கலாம்.



இன்றைய எனது பேச்சின் சாரமாக இதனையே நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகின்றேன். கடைசியாக, இங்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்பாடசாலையின் அதிபர் என்னிடம் இப்பாடசாலைக்காக எதுவும் கேட்கவில்லை.

அவர் கேட்டாலும், கேட்காவிட்டாலும், நான் எனது தாய்க்கு எது எது செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேனோ, அதனைப் போலவே, என்னை வளர்த்து நல்ல மனிதனாகவும், மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய ஒருவனாகவும் வளர்த்துவிட்ட இப்பாடசாலைக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்யக் கடமையுணர்வோடு காத்திருக்கின்றேன் என்று கூறி, எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பினை கௌரவமாகக் கருதுவதோடு, இன ஒற்றுமைக்கான அத்திவாரமாகவும் கருதி, இதனோடு சம்பந்தமுடைய எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனைப் பட்டினத்தின் இருதயம் போன்று, இப்பாடசாலை அமைந்துள்ளது. இ∴தே வேளை இப்பாடசாலையில் நான் படித்தபோது, இருந்த பழைய கட்டிடங்கள் பல வருடங்களாக வெள்ளையடிக்கப்படாமல், பொலிவின்றிக் காணப்படுவதையும் பார்த்து நான் வேதனைப்பட்டேன்.

இப்பாடசாலை புதுப்பொலிவோடு காட்சி தருவதற்கு என்னால் இயன்றவற்றைச் செய்ய நான் கடமைப்பட்டவனாக உள்ளேன்.

அதிலும் குறிப்பாக, இங்கு சகல வசதிகளையும் கொண்ட நவீனமான ஒன்றுகூடல் மண்டபம் ஒன்றினை அமைக்க நான் பெருவிருப்புக் கொண்டுள்ளேன்.

இம்மண்டபம் இப்பாடசாலையின் மாணவர்களுக்குப் பயன்படும் அதேவேளை சகல இன, மாணவர்களும், மக்களும் பயன்படுத்தக்கூடிய, ஒன்றுகூடக் கூடிய கலை இலக்கிய நிகழ்வுகளை நடத்தக்கூடிய ஒரு இடமாகவும், பொது விடயங்களைக் கலந்து பேசி முடிவெடுக்கக்கூடிய இடமாகவும் அமைக்க - அமைய ஆசை கொண்டவனாக உள்ளேன்.

இந்த ஒன்றுகூடல் மண்டபத்திலே தினமும் பேச்சுப் போட்டியென்றும், நாடக அரங்கேற்றமென்றும், கவியரங்கென்றும், பட்டிமன்றமென்றும், புத்தக வெளியீடு என்றும், சர்வ சமய சொற்பொழிவு என்றும், ஏதாயினும் ஒரு நல்ல நிகழ்வு நடந்துகொண்டேயிருக்க வேண்டும். எல்லா இனமக்களும் ஒன்றுகூடும் ஒரு இடமாக இது பரிணமிக்க வேண்டும்.

கலை, இலக்கிய முயற்சிகளினூடே நல்ல விழுமியங்களும் இன ஒன்றுமையும் வளர்ச்சிபெற வேண்டும்.

இன்று உலகெங்கும் பிரபலமான பல சர்வகலாசாலைகளும், கல்லூரிகளும் உள்ளன. இவை அனைத்துமே அரசியல், பௌதீகவியல், இரசாயனவியல், வானவியல், பொருளியல் என எத்தனையோ துறைகளைப் படிப்பிக்கின்றன.

ஆனால், எமது துர்அதிர்ஷ்டம் எந்தவொரு பல்கலைக்கழகமோ கல்லூரியோ ஆத்ம ஞானத்தை துறைபோகக் கற்றுக்கொடுக்கும் நிலையங்களாக இல்லையெனலாம்.

ஆத்மா பற்றிய தெளிவு மிகமிக முக்கியம் என நாம் யாரும் கருதுவதில்லையென்பதுதான் இதன் பொருள் என நான் நினைக்கின்றேன்.

சுத்தமான தெளிவான ஆத்மா இல்லாத உடலுக்கு எதுவித மதிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்தவ திருச்சபையினர் கல்விக்கு ஆற்றிய பணி அளப்பரியது

| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி |
| தலைமை | : | அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ மத்தியு அவர்கள் |
| விடயம் | : | வரவேற்புக் கூட்டம் |
| திகதி | : | 06-04-1995 |

எல்லாம் வல்ல இறைவனுக்கே புகழனைத்தும்.

எனது மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய இப்பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ. மத்தியு அவர்களே,

இக்கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள

உலமாப் பெருமக்களே,

சகோதர, சகோதரிகளே,

ஆசிரியர்களே,

பெற்றோர்களே,

பொதுமக்களே,

மாணவர்களே,

கல்விமான்களே,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர் உள்ளத்திலும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும்.

இப்பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் சேர்ந்து எனக்கு அளித்துள்ள இவ்வரவேற்பினை நான் மன மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கின்றேன். நான் இந்த வரவேற்பில் கலந்து கொண்டது, முஸ்லிம் காங்கிரஸின் தலைவன் என்பதை விட, ஓர் அமைச்சர் என்பதை விட, இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற எண்ணமே எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அத்தோடு எனக்கு வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்து மடல் என்னுள்ளத்தை நெகிழ வைத்தது. (இந்த வாழ்த்து மடல் பின்னிணைப்பாகவுள்ளது)

இப்பாடசாலை நீண்ட வரலாற்றினைக் கொண்டது.

அசைக்க முடியாத பல சம்பிரதாயங்களைக் கொண்டது.

ஆற்றல் மிக்க பல தலைவர்களையும், நல்ல பண்புகளையும் கொண்ட மனிதர்களை உருவாக்கப் பாடுபட்டுள்ளது.



இப்படிப்பட்ட புகழ்வாய்ந்த ஒரு பாடசாலையில் நானும் படித்தவன் என்று கூறிக் கொள்வதில் பெருமகிழ்வும் பெருமையடைகின்றேன்.

கல்முனைப் பிராந்தியத்தின் கல்வி வரலாற்றை எடுத்துக் கொண்டாலும் சரி, கிழக்கு மாகாணத்தின் கல்வி வரலாற்றை எடுத்துக் கொண்டாலும் சரி, ஏன் எமது நாட்டின் கல்வி வரலாற்றை எடுத்துக் கொண்டாலும் சரி, கிறிஸ்தவ திருச் சபையினர் கல்விக்கு ஆற்றிய சேவை மிகப் பெரியது எனலாம்.

கிழக்கு மாகாணத்தில் முதலாலது பாடசாலையை 1818ஆம் ஆண்டு “வில்லியம் ஓல்ட்”என்பவர் புளியந்தீவிலே ஆரம்பித்து ஆங்கிலக் கல்வியை அறிமுகம் செய்தார் என்று வரலாறு கூறுகின்றது.

இதனையடியொற்றியே கல்முனை பாத்திமா கல்லூரியும், தனது கல்விச் சேவையினை நீண்ட காலமாக இப்பிராந்தியத்திலே இன வேற்றுமை பாராது செய்து வருகின்றது. நான் இங்கு வருவதற்கு முன் எனக்குக் .கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இருந்தும், நான் அதனைப் பொருட்படுத்தாது இங்கு வந்துள்ளேன்.

எங்களின் மார்க்கத்தில் “கழாகத்ர்”என்றொரு விடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளது. “இறைவனின் முன்னேற்பாடு”என்று தமிழிலே இதனைக் கூறலாம்.

“ஒவ்வொரு மனிதனின் பிறப்பும், இறப்பும் இறைவனால் எப்பொழுதோ தீர்மானிக்கப்பட்டது. இதனை யாரும் மாற்றவோ, அழிக்கவோ முடியாது”என்ற இந்த அடிப்படைக் கொள்கை ஓர் இஸ்லாமியன் நம்ப வேண்டிய அடிப்படைக் கொள்கைகள் ஆறில் இதுவும் ஒன்றாகும். இதனை நம்பாவிட்டால் அவன் இஸ்லாமியனாக இருக்க முடியாது.

ஓர் இஸ்லாமியன் நம்ப வேண்டிய அடிப்படைக் கொள்கைகளின் இன்னுமொன்று, ஈசா நபியையும் அவரது மார்க்கத்தையும் நம்புவது. அதாவது இயேசு நாதரையும் அவரால் போதிக்கப்பட்ட மார்க்கத்தையும் ஓர் இஸ்லாமியன் நம்ப வேண்டும். அப்படி நம்பாதவிடத்து அவன் இஸ்லாமியனாக இருக்க முடியாது.

ஒரு கிருஸ்தவப் பிரஜை முகம்மது நபியையும், அவரால் போதிக்கப்பட்ட இஸ்லாத்தினையும் நம்பாவிட்டாலும் அவர் கிறிஸ்து மதத்தில் இருந்து விலகி விட்டவராகக் கருதப்படுவதில்லை. இதனை நான் இங்கு ஏன் கூறுகின்றேன் என்றால்,

ஒரு இஸ்லாமியனின் அடிப்படை மார்க்க விதிகளில் ஒன்று யேசுநாதரையும், அவரால் போதிக்கப்பட்ட மார்க்கத்தினையும் கட்டாயம் நம்புவது.

இல்லாவிட்டால் அவன் இஸ்லாமியனாக இருக்க முடியாது.

இ∴தேபோன்று இன்னுமொன்றினையும் இங்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

ஓர் இஸ்லாமியன் வேறு ஒரு மதத்துப் பெண்ணை திருமணம் செய்ய விரும்பின் முதலில் அப்பெண்ணை இஸ்லாம் சமயத்தில் முறைப்படி சேர்த்த பின்பே, திருமணம் செய்துகொள்ள முடியும்.

ஆனால் புரட்டஸ்தாந்து மதத்துப் பெண் ஒருத்தியை இஸ்லாத்தைத் தழுவுமுன்பே, திருமணம் செய்து கொள்ளலாம்.

இ∴தே போல, பெயர்கள் கூட எமது இரு சமூகத்தவர்களுக்கும் இடையே ஒற்றுமையாக இருப்பதைக் காணலாம்.

எங்கள் மத்தியில் யாக்கூப் இருப்பது போல, உங்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கோபு இருக்கிறார்.

எங்கள் மத்தியில் யூசுப் இருப்பது போல உங்கள் மத்தியிலும் யோசேப் இருக்கிறார்.

இ.்.தேபோல எமது இரு சமூகத்தின் ஒற்றுமையையும் எடுத்துக்கூற எத்தனையோ விடயங்களை இங்கு கூற முடியும். கிருஸ்தவர்களையும் அவர்களது மார்க்கத்தையும், இஸ்லாமியர்களாகிய நாங்கள் மதிக்கிறோம். எங்களின் வேத நூலான குர்ஆனிலே பல இடங்களில் ஈசா நபி பற்றியும் அவரது தாயார் பற்றியும், அவரது பிறப்புப் பற்றியும் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கிழக்கிலே வாழ்கின்ற எமது இரு சமூகத்தவர்களினது தாய்மொழியும் தமிழாகவே இருக்கின்றது.

மத்திய கிழக்கிலே தோன்றிய தொடர் மதங்களான நான்கு மதங்களில் கிறிஸ்தவமும் இஸ்லாமும் இடம்பெறுவது எம்மைப் பெருமையடையச் செய்கின்றது. இரண்டு மார்க்கங்களும் உலகளாவிய மார்க்கங்களே.



இவ்வாறு எத்தனையோ ஒற்றுமைகள் எம் இரு சமூகத்தவரிடையேயும் உண்டு என்பதால் நாம் இன்று போல் என்றும் ஒற்றுமையாக வாழ இறைவன் நல்லருள் புரிய வேண்டும். என இறைவனை இறைஞ்சி கடைசியாக எனக்கு அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பிற்கும், எனக்குக் கல்வியூட்டி என்னை நல்ல மனிதனாக வளர்தெடுத்த இப்பாடசாலைக்கும் என்றும் நன்றியறிதலோடு இருப்பேன் என்றும் கூறுவதோடு இப்பாடசாலைக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய ஆயத்தமாக உள்ளேன் என்றும் கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.

**குறிப்பு :**

“இங்கு எனக்கு வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்து மடல் என்னுள்ளத்தை நெகிழ வைத்தது” என்று தனது பேச்சின் போது அல்-ஹாஜ் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் குறிப்பிட்ட வாழ்த்து மடல் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைக்
கம்பன் கண்டால்
"அன்றலர்ந்த
செந்தாமரை" யென
அழகு தமிழால்
அழைத்து மகிழ்வான்.

★

புலவரிலே "புகழேந்தி
புயந்தோள் மன்னா"!
என
பூரித்துக் கூப்பிடுவான்.

★

"என்கோ"! என்றே
இளங்கோ
அழைத்து மகிழ்வான்
வள்ளுவனோ
உங்களைப் பார்த்து
"இவன் தந்தை
என்னோற்றான்"
என
ஓயாது உச்சரிப்பான்.

★

கம்பனைப் போல்,
வள்ளுவன் போல்,
இளங்கோவைப் போல்,
என்னால் உங்களை
வர்ணிக்க முடியுமா?
அதனால்,
கார்மேல் பாத்திமா
உங்களை,

ஈழத்து
சிறுபான்மை இனத்தவரின்
இதய வானில் எழுந்து வரும்
இளம்பிறையே,
என
அழைக்க விரும்புகிறது.

★

கார்மேல் பாத்திமா
உங்களுக்கு,
கல்விப்பாலூட்டிய
செவிலித்தாய் என்ற
உணர்வில்,
உங்கள் காலடிகளை,
தன் கண்ணில்
ஒற்றிக்கொள்ள
நினைக்கிறது.

★

தேர்தல் காலத்தில் நீங்கள்
"அஞ்சியும் வாழமாட்டோம்
கெஞ்சியும் வாழமாட்டோம்"
எனச் சூழுரைத்த
எங்கள் வீரமகன்
வீமனென்றே
நாங்கள் பெருமைப்பட்டோம்.
மலர்களை அள்ளுவது போல,
மனித மனங்களை
அள்ளி அணைத்து
தேர்தலில் வெற்றிவாகை சூடி,
காரிலே பவனி வந்த போது,
தேரிலே அர்ச்சுணண்
வருவதாக
எண்ணி,
அகமகிழ்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றம் சென்று,
நாங்களெல்லாம் வியக்கும் வண்ணம்,
ஜாதி மத பேதமற்று,
மக்களின் மந்திரியாகி,
அனைவருக்கும் அள்ளிக்கொடுத்து,
புனர்வாழ்வளிக்கும் நீங்கள்,
தலைமகன் தர்மனன்றோ.

★

பஞ்ச பாண்டவரையும்
உங்களுருவில்
பார்த்த பெருமை எங்களுக்கு.

★

மக்காவில் நீங்கள்,
"ஹஜ்" கடமையின் போது,
தாயாரை
தன் தோளில் சுமந்து
க∴பாவை வலம் வந்த,
செய்தி கேட்டு,
நாங்கள்,
ஆனந்தக் கண்ணீர் விட்டு,
ஆசீர்வதித்தோம்.
உங்களின் தாயன்பை
இத்தரணியே போற்றுகிறது.
இப்படிப்பட்ட
உங்களின் நல்ல தன்மைகளைக் கூறி
பெருமைபட்டுக் கொள்ளும்
பாத்திமாக் கல்லூரி,
உங்களிடம், வினயமான
வேண்டுகோள் ஒன்றை,
விடுக்க விரும்புகிறது.
அது,
நீங்கள் தாயைப்
பார்க்க வரும் போதெல்லாம்
உங்களின்
செவிலித்தாயாகிய
என்னையும்
பல தடவைக்கு ஒரு
தடவையாயினும்
மறக்காமல்
பார்த்துவிட்டுச் செல்லுங்கள்.
அல்லது,
என்னைக் கடந்து செல்லும் போது
மறக்காது
நினைத்துச் செல்லுங்கள்.
பாத்திமா எனும்
உங்கள் செவிலித்தாய்
நீங்கள் மாணவனாக வந்து சேர்ந்த
27.01.60ம் திகதியாகிய
அன்றைய தினத்தையும்
மந்திரியாக வந்து சேர்ந்த
06.04.95 ஆகிய
இன்றைய தினத்தையும்
என்றும் மறக்க மாட்டாள்.
நன்றே செய்யும்,
நல்லவர் நீங்கள்.
ஆண்டாண்டு காலம்
நீண்டு வாழ்கவென,
வாழ்த்துக் கூறும்
கல்முனை கார்மேல் பாத்திமா.

★★★

கவிதையாக்கம்
மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனங்கள் பக்கச்சார்பாக அமைந்துவிடக்கூடாது

| | | |
|---|---|---|
| இடம் | : | கொழும்பு தெமட்டகொட சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தில் "மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை" நூல் வெளியீட்டு விழா |
| தலைமை | : | கலாநிதி எம்.எம். உவைஸ் அவர்கள் |
| திகதி | : | 29-07-1995 |

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்குகின்ற கண்ணியத்திற்குரிய கலாநிதி எம்.எம். உவைஸ் அவர்களே!

நூலாசிரியர் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்களே!

அறிமுகவுரை, விமர்சன உரை, வரவேற்புரை, வாழ்த்துரை, நன்றியுரை என பல உரைகளை இங்கு ஆற்றிய பெரியோர்களே!

உலமாப் பெருமக்களே!

இலக்கிய நெஞ்சங்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர் உள்ளங்களிலும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

மணிப்புலவர் அவர்களுடைய "மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை" எனும் இந்த ஆய்வுநூல் அவருடைய ஐந்தாவது நூல் என நினைக்கின்றேன்.

எனக்கும் எனது கவிதைகளையும் கட்டுரைகளையும் தொகுத்து நூலாக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அவற்றைச் செயல்படுத்த நேரமும் அவகாசமும் இல்லாதிருக்கின்றேன்.

ஆனால் மணிப்புலவர் அவர்களோ கல்வி நிர்வாக உத்தியோகஸ்தராகவும், பொது வேலைகளில் ஈடுபாடு கொண்ட ஒருவராக இருந்தும் இவ்வளவு வேலைகளுக்கு மத்தியில் ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளார் என்பதனை நினைக்கும்போது அவரை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

எல்லா வேலைகளையும் விட எழுத்து அவரோடு இரண்டறக் கலந்துவிட்டது என்பதனையே இது காட்டுகின்றது எனலாம்.



இந்நூலினை நான் வாசித்தபோது என்னால் பல புதுப்புது விடயங்களை அறியக் கூடியதாக இருந்தது.

இந்நூலிலே மணிப்புலவர் அவர்கள் பல புதுப்புதுக் கருத்துக்களை முன்வைத்து அவற்றை ஆதாரபூர்வமாக நிரூபித்துச் செல்வதினையும் என்னால் அவதானிக்க முடிந்தது.

இந்நூலிலே அவர் தமிழ் மொழியும் மலையாள மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளல்ல என்றும்,

இவையிரண்டும் சுமேரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளென்றும் நிரூபித்துச் செல்கின்றார்.

இ∴தே போல "சங்கத்தமிழ்" எனக் குறிக்கப்படும் சொல்லிலே உள்ள "சங்கம்" என்ற சொல் ஒரு அமைப்பினைக் குறிக்கப் பயன்படவில்லை. இது மிகத் தொன்மையான காலத்தைக் குறிக்கவே பயன்பட்டுள்ளது என்றும்,

அரேபியர்களின் அல்லது சுமேரியர்களின் முதல் குடியேற்றம் இலங்கையின் மேற்குக் கரைகளிலல்ல, கிழக்குக் கரைகளிலேயே என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபித்துள்ளார்.

இந்த ஆய்வு சரியா பிழையா என்பதனை எங்களால் இலேசாகக் கூறிவிட முடியாது.

சாதாரண வாசகனால் இவற்றினைத் தீர்மானிக்கவும் முடியாது.

ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற ஆய்வாளர்களே இதற்கு முடிவு கூற முடியும்.

ஆனால் ஒன்றை மட்டும் என்னால் இந்நூல் பற்றித் திட்டவட்டமாகக் கூற முடியும்.

இந்நூலிலே இடம்பெற்றுள்ள விடயங்களில் பல சர்ச்சைக்குரிய விடயங்கள் என்றாலும், அவை வெளிச்சத்திற்கு வரவேண்டியவையே என்பதில் யாருக்கும் கருத்துவேற்றுமை இருக்க முடியாது. உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களிடம் மட்டுமேயுள்ள "குடிவழி" அமைப்பு முறை பற்றி மிக விரிவாக ஆய்வின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

எனக்குத் தெரிந்த பல குடிகள் இங்கு இடம்பெற்றுள்ளனவா என அவதானித்தேன்.

எனக்குத் தெரிந்ததோடு, எனக்குத் தெரியாத பல குடிகளும் இங்கு இடம்பெற்றுள்ளன என்பது மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு சின்னமும் வழக்கில் இருந்துள்ளது என்ற யாருக்கும் தெரியாத செய்தியினையும் எடுத்துக் காட்டியும் குடிகளின் சின்னங்களை படங்களின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதுவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஒரு எழுத்தாளன் தனது பொருள், உடல், சக்தி, நேரம், காலம் போன்ற பலவற்றைச் செலவு செய்தே மிகக் கஷ்டப்பட்டு ஒரு நூலினை ஆக்குகின்றான்.

நாம் மேலெழுந்தவாரியாகப் படித்து விட்டு விமர்சிக்கத் தொடங்கிவிடுகின்றோம். விமர்சித்தலில் கூட நாம் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பக்கசார்பாக விமர்சித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் மேலும் மேலும் ஆக்கத்திற்கு வழிவகுக்க வேண்டுமே தவிர அழிவுக்கு இட்டுச் செல்லக் கூடாது.

விமர்சனம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு நான் இங்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்நூலின் தலைப்பு "மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை" என இருப்பதற்குப் பதிலாக "இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு" என்றோ,

அல்லது,

"இலங்கை முஸ்லிம்களின் வழியும் தமிழ் மொழியும்" என்றோ,

அல்லது,

வேறு ஏதாயினும் ஒரு வழியில் இக்கருத்துக்களைப் புலப்படுத்தக் கூடிய வகையில் தலைப்பு அமைந்திருந்தால் நூலின் உள்ளே என்ன பொருள் பொதிந்துள்ளது என்பதனை வெளியே நின்று பார்ப்பவர்கள் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.



உள்ளே இலங்கை முஸ்லிம்களின் பல அரிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் தலைப்பைக் கொண்டு அதனை எம்மால் ஊகிக்க முடியவில்லை. பசுங்கதிர் பத்திரிகை ஆசிரியர் எம்.கே.ஈ. மௌலானா அவர்கள் எழுதிய "சேது முதல் சிந்து வரை", ராகுல சாங்கிருத்தியான் எழுதிய "வொல்காவில் இருந்து கங்கை வரை" போன்ற நூல்களுக்கு பெயர் அமைந்திருப்பது போல, மணிப்புலவரும் தனது நூலுக்கு "மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை" எனப் பெயரிட்டிருக்கலாம். மூன்று நூல்களுமே வரலாறு கூறும் நூல்கள்தாம். தப்பில்லை. தவறு என்று சொல்லவும் முடியாது.

நடந்தது என்னவெனில் இக் காலகட்டத்தைப் பொறுத்தவரை "மத்திய கிழக்கு" எனும் சொல் திடீரென எமது மனத்திலே வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் தன்மையை, அதாவது மத்திய கிழக்கிலே தொழிலுக்காக - பணம் தேடுவதற்காக செல்லும் கருத்தினையே எமக்களிக்கின்றது.

அல்லது பிரயாணக் குறிப்பு ஒன்றினையே நாம் எண்ணிப்பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிடும். நானும் இந்நூலின் தலைப்பினைப் பார்த்ததும் பிரயாண நூல் என்றே நினைத்தேன். வாசித்தபோதுதான் இது ஆழ அகலமான பல முக்கிய விடயங்களை உள்ளடக்கிய இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம், மொழி, கலாச்சாரம், பண்பாடு, விழுமியங்கள் கொண்ட ஒரு நூல் எனக் கண்டேன்.

இங்கு விமர்சன நோக்கோடு இதனைக் கூறுவதால் நூலாசானுடைய மனம் தாக்கப்படுவதற்கு இடமில்லை. இதனை அவர் ஒரு ஆலோசனையாகவே ஏற்று நூலின் தரத்தினை மேம்படுத்த தலைப்பினை எதிர்வரும் பதிப்புக்களில் மாற்றிக்கொள்ள மனம் ஒப்புவார்.

விமர்சனங்கள் இவ்வாறுதான் இருக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை நூலாசிரியர் துணிந்து சொல்லியுள்ள அவரது மனத்திடத்தை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. உண்மைகளை நிரூபிக்கும் ஆய்வுகளைச் செய்து அவற்றினைத் துணிந்து கூறக்கூடிய எழுத்தாளர்கள் இன்றைய எமது சூழ்நிலையில் மிகமிக அவசியம் என்பதனால் மணிப்புலவரை நான் பாராட்டுகின்றேன்.

அவருக்கு நீண்ட ஆயுளையும் பலத்தினையும் கொடுத்து அவரது எழுதும் கரங்களை மேலும் மேலும் வலுப்படுத்த இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தொண்டு அளப்பரியது

| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனைக்குடி அல்–அஸ்ஹர் வித்தியாலயம் |
| தலைமை | : | யூ.எல்.ஏ. மஜீத், அதிபர் அவர்கள் |
| விடயம் | : | பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் கலாச்சார நிகழ்வும் |
| திகதி | : | 13.07.1996 |

இப்பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் யூ.எல்.ஏ. மஜீத் அவர்களே!
உலமாப் பெருமக்களே!
கல்வியதிகாரிகளே!
ஆசிரியர்களே!
மாணவர்களே!
என் உடன் பிறப்புக்களே!

எல்லோருக்கும் எனது இனிய சலாம் உரித்தாகட்டும்.

நான் இப்பாடசாலையிலேயே எனது ஆரம்பக் கல்வியைக் கற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை நினைக்கும்போது, உண்மையிலேயே என் மனம் மகிழ்ச்சியடைகிறது. இஃதே வேளை எனது கன்னிப் பேச்சினையும், இப்பாடசாலையிலேயே பேசிப் பழகினேன் என்பது, என் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ்.

நான் பேசுவதற்காக மேடையேறியபோது, எனக்கு இங்கு கல்வி புகட்டிய ஆசிரியர்கள் என் மனக்கண் முன்னே தோன்றி மறைந்தார்கள்.

இன்று அவர்களில் சிலர் இறையடியெய்தி விட்டார்கள். ஒருசிலர் இன்னும் உயிரோடிருக்கிறார்கள்.

உயிரோடிருப்பவர்களில் புலவர்மணி சரிபுத்தீன் ஹாஜியார் அவர்களும் ஒருவராவார்.

புலவர்மணி சரிபுத்தீன் ஹாஜியார் அவர்களை என்னால் என்றும் மறக்க முடியாது. நான் இப்பாடசாலையில் மூன்றாம் வகுப்பிலே படிக்கும் போது, ஒருநாள் ஹாஜியார் அவர்கள் என்னை அழைத்து அவரால் எழுதப்பட்ட பேச்சொன்றினை என்னிடம் கொடுத்து இதனை மனப்பாடம் செய்து, எதிர்வரும் மாணவ மன்றத்தில் பேசவேண்டுமென கட்டளையிட்டதோடு மட்டுமல்லாமல், மேடையேறுமுன் இரண்டொரு தடவை ஒத்திகை பார்த்து, பேச்சினைச் சரியாகப் பேசுவதற்குப் பயிற்சியும் அளித்தார்.

இதனை வேறு ஒருவகையாகக் கூறுவதாயின், இப்படியும் கூறலாம். என்னிடம் இருந்த பேசும் ஆற்றலை இனங்கண்டு, அதனை வளர்த்து எதிர்காலத்தில் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு எனக்கு எனது தகுதிக்கேற்ப, பேச்சொன்றினை எழுதிக் கொடுத்து அதனை எவ்வாறு மேடையிலே பேச வேண்டுமென அவரே பேசியும் காட்டிப் பயிற்சியளித்து என்னை மேடையேற்றி பேச்சாளனாக்கி விட்ட பெருமை புலவர்மணி அவர்களையே சாரும் எனப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இஃதே போல, நான் நல்லவனாக வளர்வதற்கான நல்ல விழுமியங்களையும், எண்ணங்களையும் வித்திட்ட பெருமையும் இப்பாடசாலையையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையின் அதிபர் அவர்கள் சற்று நேரத்திற்கு முன் இப்பாடசாலையின் ஆரம்ப கால சேர்விடாப்பினைக் கொண்டுவந்து நான் இப்பாடசாலையிலே சேர்ந்த திகதியினையும், சேர்வு இலக்கத்தினையும் காட்டியதோடு மட்டுமல்லாமல், நான் மூன்றாம் வகுப்பு இறுதியாண்டுப் பரீட்சையிலே பெற்ற புள்ளிகளையும் காட்டினார். இவற்றைப் பார்த்தபோது, சற்று நேரம் ஆனந்த மேலீட்டால் என்னையே நான் மறந்து பழைய சுவடுகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். இந்த ஆவணங்களை அழியாது இவ்வளவு காலத்திற்குப் பாதுகாத்து வைத்திருந்த சகல அதிபர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இப்பாடசாலையில் படித்த அநேகம் பேர் பெரிய, பெரிய பதவிகளிலும் நல்ல செல்வந்த நிலையிலும் இருக்கிறார்கள் என இப்பாடசாலையின் அதிபர் என்னிடம் எடுத்துக் கூறினார். அதற்கு நான் "புலவர்மணி சரிபுத்தீன் போன்ற நல்லாசிரியர்கள் இப்பாடசாலையில் படிப்பித்திருக்கிறார்களே" எனக் கூறினேன். இந்த மேடையிலே ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



"தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்ற பழமொழி மிக, மிக ஆழமான கருத்தினையும் உண்மையையும் கொண்டது என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

பெற்றோர்களை விட ஆசிரியர்களே மாணவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்தக்கூடிய, பங்களிப்பைச் செய்யக்கூடிய வாய்ப்பினைப் பெற்றவர்களாக உள்ளார்கள் என்பதற்கு புலவர்மணி என்னை ஆற்றுப்படுத்திய சம்பவத்தை உதாரணமாகக் கூற முடியும்.

இ∴தே போலத்தான் நான் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் படித்தபோதும், என்னை எனது ஆசியரியர்கள் மாணவத்தலைவனாக ஆக்கி அதற்கான பயிற்சியும் அளித்தார்கள்.

இவ்வாறெல்லாம் ஆசிரியர்கள் எனக்கு உதவி செய்திருக்காவிட்டால், என்னால் இன்று தலைவனாகவோ அல்லது மக்களுக்குச் சேவை செய்யும் எண்ணத்தையோ பெற்றிருக்க முடியாது.

மாணவர்களில் பலர் கல்வியறிவில்லாத சூழலில் இருந்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைப்பட்டவனாகவும் அல்லது நோய்வாய்ப்பட்டவனாகவும் பாடசாலைக்கு வந்து சேரலாம். சுத்தம் என்பது அம்மாணவர்களுக்கு என்ன என்பதே தெரியாதிருக்கலாம். எதிர்காலத்தைப் பற்றிய அக்கறை எதுவுமில்லாத அந்தப் பிஞ்சு உள்ளங்களை அன்போடு ஆதரித்து, அக்கறையோடு அவர்களுக்கு கல்வியூட்ட வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் ஆசிரியர்களுக்கே உண்டு. சம்பளத்திற்காக மட்டும்செய்யும் தொழிலாக ஆசிரியத் தொழிலைக் கொள்ள முடியாது.

ஆசிரியத் தொழில் என்பது சேவை மனப்பான்மையோடு செய்யும் தொழிலாகும். உலகில் இரண்டு தொழில்களைப் புனிதமாகக் கருதுவார்கள்.

ஒன்று ஆசிரியத் தொழில். மற்றது வைத்தியத் தொழில்.

இந்த இரண்டு தொழிலையும் சேவை மனப்பான்மையோடு புனிதமாகச் செய்பவர்களுக்கு இறைவன் நற்கூலியளிப்பான்.

இறைவன் தனது திருமறையிலே "றப்பு" என்ற சொல்லினை மூன்று வகையான கருத்தினைப் புலப்படுத்தும் வண்ணம் தனது திருமறையாம் திருக்குர்ஆனிலே கூறியுள்ளான். அவற்றில், ஒன்று "இறைவன்" எனப் பொருள்படும் வண்ணமும்,

இரண்டாவது, "ஆசிரியன்" எனப் பொருள்படும் வண்ணமும்,

மூன்றாவது, "பெற்றோர்" எனப் பொருள்படும் வண்ணமும் கூறியுள்ளான். இந்த இடத்திலே, நாம் "றப்பு" என்ற அரபுச் சொல் எமது திருமறையாம் திருக்குர்ஆனிலே "ஆசிரியன்" எனப் பொருள்படும் வண்ணமும் கூறியுள்ளான் எனின், ஆசிரியர்களின் மகிமையை அந்தஸ்தை எவ்வளவு ஆழமாகவும், அர்த்தபுஷ்டியோடும் கூறிக் கௌரவப்படுத்தியுள்ளான் என்பதை நாம் சிந்தித்துப் பார்த்துச் செயற்பட வேண்டும்.

இந்துமதப் பெரியார்கள் கூட, "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்று கூறியிருப்பதும் இங்கு ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்றாயுள்ளது.

ஒரு காலத்தில் பணக்கார வர்க்கத்தினருக்கு மட்டுமே உரித்தாக இருந்த கல்வியை 1944ம் ஆண்டு இலவசக் கல்வி என்ற சட்டத்தின் மூலம் நாட்டு மக்கள் சகலருக்கும் உரித்தாக்கிய பெருந்தகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவத்துக்குரிய கன்னங்கரா அவர்களை சிங்கள சமூகம் மட்டுமல்ல, இலங்கையில் வாழ்கின்ற சலக சமூகத்தினரும் கண்ணியத்தோடு நினைவுகூர வேண்டியவர்களாக உள்ளோம்.

இஃதே போலத்தான், 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில், மாணவருக்கான சீருடை, இலவசப் பாடநூல் போன்றவற்றையும் அரசே இலவசமாக மாணவர்களுக்கு அளிப்பதன் மூலம் நாட்டில் வறிய மக்களும் கல்வி கற்க வாய்ப்பினை அரசு மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இலவச சீருடை, இலவச பாடநூல் என்பவற்றை வறிய மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், சகல மாணவர்களுக்கும் ஏன் விநியோகம் செய்கிறார்கள் என்ற கேள்வி உங்கள் உள்ளத்திலே எழக்கூடும். நானும்கூட, இப்படி நினைத்ததுண்டு.

அவ்வாறு வறிய பிள்ளைகளுக்கு மட்டும் விநியோகம் செய்திருந்தால், வறிய பிள்ளைகள் இனங்காட்டப்பட்டிருப்பார்கள். இதனால், பணக்காரப் பிள்ளைகள் மத்தியிலே வறிய பிள்ளைகள் கூச்சத்தோடு, கூனிக் குறுகி வாழவேண்டியேற்பட்டிருக்கும். இதனைப் போக்கவே, எந்த வகையிலும் ஏழை மாணவர்கள் பாதிப்படையக்கூடாது என்ற உயர்நோக்குடனேயே அரசு இவ்வாறு சகல மாணவர்களுக்கும் சீருடை, இலவசப் பாடநூல் என விநியோகிக்கின்றது எனலாம்.

எனவேதான், இந்த நாட்டில் வாழும் நாம் பாக்கியசாலிகள் என்று கூற வேண்டும். இப்படியான சலுகைகளை சரியான முறையில் பயன்படுத்தி சரியான பலனைப் பெற மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும்.

அரசர்கள் கூட தங்களது ஆசிரியர்களை பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி, மதித்துக் கௌரவித்த சரித்திரங்கள் பலவற்றை இலக்கியங்கள் வாயிலாக நாம் படித்துள்ளோம்.

ஆசிரியர்கள் சொல்வதை மாணவர்கள் தேவ வாக்காகக் கருதுவதை நாம் நமது அனுபவத்திலேயே கண்டிருக்கின்றோம். இதற்கு உதாரணமாக, எனது வாழ்க்கையிலேயே நடந்த சம்பவம் ஒன்றினை இங்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

எனது மகன் சிறுவனாக, ஆரம்பப் பள்ளியிலே படித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தபோது, எனது மகனின் கணிதக் கொப்பியினை எடுத்துப் பார்த்தேன். அதில் ஒரு கணக்குப் பிழையாகச் செய்யப்பட்டிருந்தது. அதற்கு ஆசிரியர் சரியென "பாஸ்" அடையாளமிட்டிருந்தார்.

இதனை எனது மகனுக்கு சுட்டிக் காட்டி, சரியாக அந்தக் கணக்கினை மகனுக்குச் செய்து காட்டினேன்.

இதனை எனது மகன் ஏற்றுக்கொள்ள மறுத்தது மட்டுமல்லாமல், எங்கள் ஆசிரியர் பிழை செய்ய மாட்டார் என்பதிலும் திடமாக நம்பிக்கை கொண்டவராக இருந்தார். இதில் இருந்து நாம் விளங்குவது என்னவெனில், ஆசிரியர்கள் எதனையும் சரியாக, மிக மிகக் கவனமாக, பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களை, மாணவர்கள் எவ்வளவு தூரம் நம்புகிறார்கள் என்பதே இதன் பொருளாகும்.

எனவேதான், ஆசிரியர்கள் புனிதமான, நம்பிக்கைக்குரிய தொழிலைச் செய்பவர்கள் என்பதை மனத்திலே கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டு, எனக்கு நீங்கள் அளித்த வரவேற்பினைக் கௌரவமாகக் கருதி, அதன்பால், இங்குள்ள அனைவருக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்

| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனை மஃமூத் மகளிர் கல்லூரி |
| தலைமை | : | வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்ஸதீன் |
| விடயம் | : | "இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும்" நூல் வெளியீடு |
| திகதி | : | 23-05-1997 |

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்குகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ.எம். இஸ்ஸதீன் அவர்களே!

நூலாசிரியர் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்களே!

அவரது குடும்பத்தவர்களே!

உலமாப் பெருமக்களே!

மேடையில் வீற்றிருக்கும் பேச்சாளர்களே!

என் உடன் பிறப்புக்களே!

எல்லோருக்கும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிப்புலவரின் ஆறாவது நூலான "இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும்" எனும் இந்த நூல் வெளியீட்டு விழாவிலே கலந்துகொள்ள இங்கு பலபேர் கூடியுள்ளோம்.

உண்மையிலேயே இந்த நிகழ்வு எனக்கு மனமகிழ்ச்சியைத் தருகிறது.

இங்கு அதிபர்களும் ஆசிரியர்களும் அபிமானிகளும் இலக்கிய நெஞ்சங்களும் எனப் பல்வகைப்பட்டோர் கூடியுள்ளோம்.

நூலாசிரியரின் தாய், மனைவி, மக்கள், சகோதரர்கள் கூட வந்துள்ளார்கள். அதனால் மண்டபம் நிரம்பி வழிகிறது. இலக்கியக் கூட்டங்களுக்கு இவ்வாறு வருவதென்பது வழமைக்கு மாறான ஒரு விடயமாகும்.

மணிப்புலவரின் தனிப்பட்ட செல்வாக்கு என இதனைக் கொள்ளலாம். மணிப்புலவரைப் பார்த்து உங்கள் தாயாருக்கு எத்தனை வயதிருக்கும் எனக் கேட்டேன். எழுபதிற்கு மேல் இருக்குமெனச் சொன்னார். என்னால் நம்பவே முடியவில்லை. எழுபது என்று சொல்ல முடியாத அளவு பொலிவோடும் இளமைத் தோற்றத்தோடும் சுறுசுறுப்பாகவும் அவரது தாயார் காணப்படுகிறார்.

மணிப்புலவர் கூட அவரது வயதை விடவும் இளமையாகவே காணப்படுகிறார். அழகாக உடுத்தி, பட்டுச்சால்வை அணிந்து மாப்பிள்ளை போன்று காணப்படுகிறார்.

மணிப்புலவரையும் அவரது தாயாரையும் பார்த்தபோது இளமையின் இரகசியத்திற்கு பரம்பரையும் ஒரு காரணம் என அவரது நூல் கூறுவது உண்மையென எனக்குப் பட்டது.

மணிப்புலவரின் தாயாரும், எனது தாயாரும் ராத்தா தங்கச்சி போல் ஒரே சாயலைக் கொண்டிருக்கிறார்கள். இதை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

"இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும்" எனும் இந்த நூலிலே,

"இளமையென்றால் என்ன? இளமையில் ஏன் ஒரு சிலர் முதிய தோற்றத்தை அடைகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைக்கும் ஆயுளுக்கும் இடையேயுள்ள தொடர்ப என்ன? இளமை, நீண்ட ஆயுள் ஆகிய இரண்டிற்கும், பரம்பரை, உணவு, உழைப்பு, ஓய்வு, பரம்பரை நோய்கள் என்பவற்றிற்குமிடையேயுள்ள தொடர்பு என்ன? என்பன போன்ற பல விடயங்கள் ஆழமாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இ∴தே போல,

உலகிலே நீடித்த ஆயுளோடும் இளமைத் தோற்றத்தோடும் வாழ்ந்து காட்டிய பலரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் இந்த நூலிலே எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவற்றில் மகாத்மா காந்தி அவர்களின் குறிப்பு எனக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது. அண்ணல் காந்தியவர்களைக் கண்டு அவரது தினசரி வாழ்க்கையை நேரிலேயே கேட்டுத் தெரிந்து ஒரு கட்டுரை எழுதுவதற்காக அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் இந்தியாவிற்கு வந்தார்.

புதுடில்லியில் மகாத்மாவைச் சந்தித்தார். எழுபது வயதிலும் மகாத்மா காந்தியவர்கள் சுறுசுறுப்புடன் ஒரு நிமிட நேரத்தையும் வீணாக்காமல் உலகம் முழுவதும் இருந்து வந்தவர்களுடன் உரையாடிக்கொண்டிருப்பதை அவதானித்தார்.

அத்தோடு வந்திருக்கும் கடிதக் குவியல்களுக்கு தம் கைப்பட பதில் எழுதுவதையும் அவதானித்தார். "ஹரிஜன்" பத்திரிகையின் ஆசிரியராக இருப்பதால் பத்திரிகையின் புறூப் திருத்தி அச்சுக்கு அனுப்புவதையும் அவதானித்தார்.

கைராட்டையில் நூல் நூற்றும் கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்திக் கொண்டிருப்பதையும் அந்த நிருபர் அவதானித்தார்.

"இளைஞனைப் போல செயல்படுகிறீர்களே, உங்களுக்குச் சக்தி எப்படிக் கிடைக்கிறது"என்று அந்த அமெரிக்க நிருபர் காந்திஜி அவர்களைக் கேட்டார். புன்னகைத்தவாறு காந்திஜி அவர்கள் "என்னை நான் வயதானவனாக நினைக்கவில்லையே, இளைஞனாக சுறுசுறுப்புள்ளவனாக அல்லவா நினைத்துக் கொண்டிருக்கின்றேன். அதுதான் இரகசியம்"என்று கூறினார். அத்தோடு "எனக்குப் பிடித்தமானவை இரண்டு. ஒன்று இறை வழிபாடு, மற்றது நடப்பது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கூறினார். என்ற செய்தியைப் படித்ததும் மகாத்மா காந்தி அவர்களைப் பற்றியும் அவரது தூய வாழ்க்கை பற்றியும் ஒருமுறை எண்ணிப் பார்த்தேன்.

இந்த நூலினைப் படித்தபோது ஓய்வும் உழைப்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல என எனக்குப் பட்டது.

ஓய்வென்பது எனது வாழ்க்கையில் எட்டாக்கனியாகவே உள்ளது. ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலங்கள் நித்திரை செய்வதென்பதே என்னைப் பொறுத்தவரை முடியாத காரியமாகவே எனக்குப் படுகிறது. புத்தகங்களை வாசிப்பதைக்கூட பிரயாணங்களின்போது வாகனங்களிலேயே வாசிக்க வேண்டியுள்ளது. மணிப்புலவரின் "இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும்" நூலினை வாசித்தபோது 'சுவர் இருந்தால் தானே சித்திரம் கீறலாம்' என்ற உணர்வும்,

உணவு, உழைப்பு, ஓய்வு போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்ற ஆசையும் ஏற்பட்டது. செயலாக்கத்தில்தான் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக,

இந்நூலிலே ஒரு இடத்தில் வயது ஏற ஏற தினமும் குளிக்கக் கூடாது என்றும், தேவையைப் பொறுத்துக் குளிப்பதை வைத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இக்கருத்தினை செயல்படுத்துவதென்பது மிகமிகச் சிரமமான காரியமாகவே எனக்குப் படுகிறது.

ஒரு நாளைக்குப் பலமுறை குளிப்பதானாலும் எனக்கு விருப்பமான ஒரு செயலே.

களைப்பு வரும்போதெல்லாம் குளிப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தரும். தேர்தல் காலங்களிலும் வேறு பல வேலைப்பழு கூடிய நேரங்களிலும் இவற்றை என்னால் தவிர்த்துக் கொள்ள முடியாதுள்ளது. எது எப்படி இருந்தாலும் எல்லோரும் இந்நூலினை வாசித்து அதன்படி நடந்தால் இளமை உணர்வோடும் நீண்ட ஆயுளோடும் நோய் நொடியின்றியும் சந்தோஷமாக வாழலாம் எனக் கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போருக்கப்பால்

## மனித நேயம் தேடல்

| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனை ம.ஃமூத் மகளிர் கல்லூரி |
| தலைமை | : | மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் |
| விடயம் | : | "அதிபர்கள் ஒன்றிய ஒன்றுகூடல்" |
| திகதி | : | 31-08-1997 |

தலைவர் அவர்களே!

மேடையில் வீற்றிருக்கின்ற பெரியோர்களே!

உலமாப் பெருமக்களே!

கல்விமான்களே!

அதிபர்களே! எல்லோருக்கும் எனது இனிய சலாமும், வணக்கமும் உரித்தாகட்டும்.

எனக்கு இன்று கொழும்பிலே முக்கியமான வேலைகள் அனேகம் இருந்தும்,

பாதுகாப்புப் படையினரின், "போக வேண்டாம்" என்ற கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையாக இருந்தும்,

போருக்கப்பால், மத, மொழி, இனங்களினூடாக மானிடம் தேடுதல் இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை அதிமுக்கியமென எனக்குப் பட்டதால், இக்கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ளேன்.

இக்கூட்டத்திற்குச் சமுகமளித்தமை உண்மையிலேயே எனக்கு மனமகிழ்ச்சியை அளிக்கிறது.

இதன் நிமிர்த்தம் முதற்கண் இறைவனுக்கும், அடுத்து மணிப்புலவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக உள்ளேன்.

இக்கூட்டத்திற்கு கல்முனை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா அதிபர்களும் சமுகமளித்துள்ளீர்கள் என்பதை அறிந்ததும் எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகியது.

இன, மத வேறுபாடின்றி, அதிபர்கள் என்ற மகுடத்தின் கீழ் இங்கு எல்லோரும் கூடியுள்ளீர்கள்.

இக்கூட்டத்தில் நான், "போருக்கப்பால் மத, மொழி, இனங்களூடாக மானிடம் தேடுதல்"என்ற தலைப்பில் பேசுதல் பொருத்தமென நினைக்கின்றேன்.



இப்பேச்சினை, இங்கு கூடியிருக்கும் நூற்றி ஐம்பது அதிபர்களுக்கு மத்தியில் பேசுவதாக நான் கருதவில்லை.

உங்களிடம் கல்வி கற்கின்ற இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட, எமது எதிர்காலச் சந்ததியினரான, மாணவர்கள் மத்தியிலே பேசுவதாகவே நான் கருதுகின்றேன்.

நான் ஒரு ஹிந்துப் பாடசாலையிலும், ஒரு கிறிஸ்தவப் பாடசாலையிலும், ஒரு முஸ்லிம் பாடசாலையிலும் கல்வி கற்கின்ற வாய்ப்பினைப் பெற்றவன் என்றபடியால், என்னை நான் பாக்கியம் பெற்றவனாகக் கருதுகின்றேன்.

நான் மேற்படி முஸ்லிம், ஹிந்து, கிறிஸ்தவப் பாடசாலைகளிலே படித்தபோது, "போருக்கப்பால் சென்று மானிடத்தைத் தேடும்" அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இருக்கவில்லை.

மூன்று மதத்து மாணவர்களும் ஒற்றுமையாக, ஒரே இனத்தவர்கள் போன்று, சகோதர பாசத்தோடு படித்து வந்தோம். எங்கள் மத்தியிலே மூன்று மதத்தவர்களினது கலை, கலாசாரப் பண்பாடுகளையும், தனித்தனியாக, எல்லோரும் அறியக் கூடியதாகவும், அவற்றை அனுபவிக்கக் கூடியவர்களாகவும் நாங்கள் எங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டோம்.

நான் ஓர் இஸ்லாமியன் என்றாலும், எனது சகபாடி மாணவர்களான ஹிந்துக்களினதும், கிறிஸ்தவர்களினதும் மதங்களைக் கண்ணியப்படுத்தக்கூடிய பக்குவம் என்னிடம் வளர்ந்திருந்தது.

இ∴தே போல அவர்கள் எனது இஸ்லாம் மார்க்கக் கொள்கைகளையும், பண்பாடுகளையும் கண்ணியப்படுத்தும் பக்குவம் அவர்களிடம் வளர்ந்திருந்தன.



எங்களிடம் பயமேதும் இருக்கவில்லை. ஒரு சமூகத்தைப் பார்த்து மற்றச் சமூகம் பொறாமைப்பட வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது மனம் திறந்து குசலம் விசாரித்துக் கொண்டோம்.

ஆனால், இன்று அப்படி மனந்திறந்து குசலம் விசாரிக்க முடிகிறதா? அப்படி நாங்கள் குசலம் விசாரித்துக் கொண்டாலும், உண்மையாக, மனத்திலே எவ்வித பயமும், கள்ளமும், குரோத மனப்பான்மையும் இல்லாமல் குசலம் விசாரிக்க முடிகிறதா? நாம் எல்லோரும் ஒருமித்த குரலில் இல்லையென்ற கூறுவோம்.

இவற்றிற்கெல்லாம், பலரும் பல காரணங்களைக் கற்பிக்க முடியும்.

இக்காரணங்களையெல்லாம் அலசி ஆராய்ந்து சரி பிழை காண்பது எங்களுடைய இன்றைய கூட்டத்தின் நோக்கமுமல்ல.

இவற்றுக்கெல்லாம் அப்பால் சென்று, மூன்று சமூகங்களும் எவ்வாறு சந்தோஷமாக வாழ்ந்தோமோ, இ∴தே போல, சந்தோஷமாக வாழ்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனமெடுப்பதே இன்றைய கூட்டத்தின் நோக்கமாகும்.

அன்று நான் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலே கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது புதுவருடப் பிறப்பின்போதும், தைப்பொங் கலின்போதும் எனது நண்பர்களின் அழைப்பின் பேரில், அவர்களது வீடுகளுக்குச் சென்று, விருந்துண்டு மகிழ்ந்து அற்றைப் பொழுதை அவர்களோடு சந்தோஷமாகக் கழித்துவிட்டு வீடு திரும்பியுள்ளேன்.

இஃதே போல, பெரிய வெள்ளிக்கிழமை கிறிஸ்மஸ் போன்ற தினங்களில் கிறிஸ்தவ நண்பர்களின் அழைப்பின் பேரில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களோடு சேர்ந்து அற்றைப் பொழுதை அங்கேயே கழித்ததும் உண்டு.

இஃதே போல, ஹஜ், நோன்பு போன்ற பெருநாட் காலங்களில், கந்தையாவும், பிரான்ஸிஸும், அந்தோனியும் எனது அழைப்பின் பேரில் எங்கள் வீட்டிற்கு வந்து, புரியாணியும், வட்டிலப்பமும் சாப்பிட்டு மகிழ்ந்ததுண்டு.

பொது விடுமுறை காலங்களில் கல்முனைக் கடற்கரையிலே வட்டக்களரி போட்டு இருந்து கடலை, கச்சான் வாங்கிக் கொறித்த வண்ணம், கலை, இலக்கிய, அரசியல் விடயங்கள் பற்றி காதர், கந்தசாமி, பிலிப் என்றில்லாமல், எல்லோரும் ஒன்றாகி இரண்டறக் கலந்து பேசி மகிழ்ந்து பொழுதைப் போக்கியதும் உண்டு. சிலவேளை பௌர்ணமி காலங்களில் கல்முனைக் கடற்கரையை விட்டு வீடு செல்ல இரவு எட்டு மணி, ஒன்பது மணி கூட ஆகலாம். இவையெல்லாம் அதீதக் கற்பனை போன்று, எமது இன்றைய இளம் சந்ததியினர் எண்ணக்கூடும். அவர்கள் அப்படி அதீதக் கற்பனை என்று எண்ணுவதில் கூடத் தப்பில்லை.

இன்றைய நிலைதான் அவர்களை அவ்வாறு எண்ணத் தூண்டுகிறது. இவற்றிற்கான காரணங்களைத் தேடி அலைந்து காலத்தை வீணாக்குவது, அரைச் சதத்திற்கும் பிரயோசனமற்ற ஒரு விடயமாகும். நாம் இன்றைய காலகட்டத்தில் செய்யக்கூடியது என்னவெனில், போருக்கு அப்பால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத, இன, மொழியினூடாக மனித நேயத்தை, மானிடத்தைக் காண மாணவர்களை வழிநடத்திச் செல்வதே பொருத்தமானதாகும்.

இவ்வாறு, மாணவர்களை வழிநடத்திச் செல்வதுதான் இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை எமது தலையாய கடமையாகவும் எனக்குப்படுகிறது. அதுவும், இப்பாரிய பணியைச் செய்யக்கூடிய வசதியும் வாய்ப்பும் அதிபர்களாகிய உங்களுக்கும் உங்களோடு வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்குமேயுண்டு.

எதிர்காலத்தில் எமது சமூகங்கள் மத்தியில் அதுவும், குறிப்பாக தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு அடுத்தடுத்து வாழ்கின்ற எமது இரு சமூகங்களும், இனங்களிடையே ஒற்றுமையோடும், சௌஜன்யத்தோடும், புரிந்துணர்வோடும், கலை கலாச்சாரங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்போடும், மனம் திறந்து கைகுலுக்கி கட்டித் தழுவி இரண்டறக் கலந்து வாழ வேண்டுமானால் அதற்கான அத்திவாரத்தை மாணவர்கள் மத்தியில் பாடசாலைகளே இட வேண்டும்.



இதற்கான ஆக்கபூர்வமான வேலைகளை அதிபர்களும் ஆசிரியர்களுமே செய்ய வேண்டும்.

எம் இரு சமூகங்களின் எதிர்கால சமாதான வாழ்க்கைக்குரிய அத்திவாரமிடும் வேலையை கண்ணியத்திற்குரிய மக்களான உங்களிடம் ஒப்படைத்துள்ளேன்.

பாடசாலைகள் இனங்களைப் பிரித்துப் பார்க்கும் இடங்களாக மாற்றிக் கொள்ளாமல், இனங்களைச் சேர்த்துச் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் இடங்களாக மாற வேண்டும். அரசியல் போராட்டங்கள் இனப் போராட்டங்களாக, மதப் போராட்டங்களாக மாறக்கூடாது.

இறைவன் திருக்குர்ஆனிலே "நாம் மனிதர்களை ஓர் ஆணில் நின்றும் ஒரு பெண்ணில் நின்றுமே படைத்துள்ளோம்" என ஆணித்தரமாகக் கூறியுள்ளான்.

இதில் இருந்து நாம் விளங்கிக்கொள்வது என்னவெனில், உலகில் வாழ்கின்ற மனிதர்கள் எல்லோரும் ஒரு குலமே. மதங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளும் எம்மிடையே வேறுபட்டாலும் நாம் எல்லோரும் ஓர் ஆணில் நின்றும், ஒரு பெண்ணில் நின்றும் உண்டானவர்களே. மதங்களும், மொழிகளும் எங்களிடையே இன ஒற்றுமையை வளர்க்க வேண்டுமே தவிர மனிதர்களைப் பிரிக்க முயலக்கூடாது.

இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு நீங்கள் செயல்பட வேண்டுமென நான் உங்களை வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வளவு நேரமும் நான் பேசியதை அமைதியாகச் செவிமடுத்துக் கொண்டிருந்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நான் பேசுவதற்கும், அதனை நீங்கள் கேட்பதற்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியிருந்த கல்முனை அதிபர் ஒன்றியத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி எனும் ஊடகம் மனிதநேயத்தை வளர்க்கின்றது.



| | | |
|---|---|---|
| இடம் | : | சம்சுல் இல்ம் மகா வித்தியாலயம் |
| தலைமை | : | ஏ.எச்.ஏ. சமத் அதிபர் அவர்கள் |
| விடயம் | : | பாடசாலை "கல்வி" தின விழா |
| திகதி | : | 13-03-1998 |

இப்பாடசாலையின் அதிபர் அவர்களே!

உலமாப் பெருமக்களே!

ஆசிரியர்களே!

மாணவர்களே!

பெற்றோர்களே!

என் உடன் பிறப்புக்களே! எல்லோர் உள்ளத்திலும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

இப்பாடசாலை குறுகிய கால வரலாற்றைக் கொண்டது என்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்னம்பெரிய பல சாதனைகளை இக்குறுகிய காலத்திற்குள் ஏற்படுத்திக் கொண்டது என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

"கல்வி" என்ற சொல்லினை நாம் சாதாரணமாகப் "படித்தல்" என எடுத்துக் கொள்வதுண்டு.

ஆனால் "கல்வி" என்பது ஆழமான பல பிரிவுகளையும் விடயங்களையும் உள்ளடக்கமாக கொண்டது எனலாம்.

அதாவது தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, உடற்கல்வி, மொழியியல் கல்வி, ஒழுக்கக் கல்வி அல்லது சமயக் கல்வி என்பன அவற்றுள் சிலவாகும்.

இக்காலகட்டத்தைப் பொறுத்தவரை மொழிக்கல்வியோடு சமயக்கல்வி எனப்படும் ஒழுக்கக் கல்வியும் மாணவர்கட்குப் போதிக்கப்பட வேண்டியுள்ளது.

ஒரு காலத்தில் பாடசாலைகளில் அறக்கட்டளைகளைப் போதிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டான், நல்வழி, நன்னெறி போன்ற நூல்கள் மூன்றாம் வகுப்பில் இருந்தே மாணவர்கட்குக் கற்பிக்கப்பட்டன.

இந்நூல்களிலே உள்ள அறக்கட்டளைகள் அடங்கிய பாடல்களை மாணவர்கள் மனனம் செய்யுமாறு தூண்டப்பட்டார்கள்.

இப்பாடல்கள் அறக்கட்டளைகள் மட்டுமல்லாது சமயக்கருத்துக்களையும் நல்ல விழுமியங்களையும் கொண்டனவாகவும் இருந்தன.

இதனால் மாணவர் மத்தியில் நல்ல ஒழுக்கம் நிலவியது.

ஒழுக்கத்தோடு கூடிய அறிவே ஒருவனை நல்ல மனிதனாக்குகிறது. அறிவின் மூலம் மனிதன் நல்லது எது? கெட்டது எது? என்று பகுத்தறியக் கூடியவனாகின்றான்.

அறிவு தீட்சண்யமடையும்போது அவன் ஞானத்தைப் பெறுகின்றான்.

ஆங்கிலத்தில் கல்வியை எடியூகேஷன் *(Education)* என்றும், அறிவினை நொலேஜ் *(Knowledge)* என்றும், ஞானத்தினை விஸ்டம் *(Wisdom)* என்றும் அழைப்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, அறிவு, ஞானம் என்பன ஒன்றோடொன்று தொடர்புடையன என்றாலும் ஒவ்வொன்றும் ஆழமான பல கருத்துக்களைக் கொண்டன, வித்தியாசமான பல போக்கினையும் கொண்டன. கல்வியினூடே அறிவினையும், அறிவினூடே ஞானத்தினையும் பெற முடியும்.

இறைவன் தனது திருமறையாம் திருக்குர்ஆனிலே "ஞானத்தை நாம் விரும்பியவர்களுக்கு மட்டுமேயளிக்கின்றோம்" எனக் கூறியுள்ளான். எனவேதான் ஞானம் என்பது இறைவனின் அருட்கொடையென்று கூறலாம்.

தொழிற்கல்வி ஒரு மனிதன் உலகிலே வருமானத்தைப் பெற்று வாழ்வதற்கு வழிசெய்யும்.

அறிவியல் கல்வி அவனை நல்லது எது கெட்டது எது என்று பகுத்தறிந்து வாழ வழிசெய்யும்.

ஞானமோ மனிதனை இறைவனோடு சேர்த்துவைக்க உதவிபுரியும்.

மொழியியல் கல்வி இத்தனைக்கும் அப்பால் சென்று மனிதனை பல்லின மனிதர்களோடும் கலந்துறவாடி வாழ வழிவகுக்கும்.



இலங்கையைப் பொறுத்தவரை நாம் ஒவ்வொருவரும் மூன்று மொழிகளை அறிய வேண்டிய பொறுப்புடையவர்களாய் உள்ளோம்.

அதாவது,

தாய்மொழியாகிய தமிழ் மொழியினையும்,

எமது பெரும்பான்மைச் சமூகத்தின் மொழியாகிய சிங்கள மொழியினையும், சர்வதே மொழியாகிய ஆங்கிலத்தினையும் நாம் படிக்க வேண்டியுள்ளது.

இ:.தே போல பெரும்பான்மைச் சமூகத்தவர்களாகிய சிங்கள மக்கள் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தாய்மொழியை மட்டும் எழுதவும் பேசவும் முடியுமானவர்களாய் இருப்பதால் இலங்கையின் ஒரு பகுதியாகிய வடக்கு கிழக்கிலே மட்டுமே எங்களால் வாழ முடியும். தமிழோடு சிங்களத்தையும், சிங்கள மக்கள் தமிழையும் கற்றுக்கொண்டால் எல்லோரும் இலங்கையின் எப்பகுதியிலும் கலந்துறவாடி வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதாயின் தமிழை மட்டும் தெரிந்த ஒருவன் பிராந்திய மனிதனே.

சிங்களத்தையும் தெரிந்துகொண்ட மனிதன் தேசிய மனிதனாகிறான்.

ஆங்கிலத்தையும் படித்த மனிதன் சர்வதேச மனிதனாகிறான்.

ஒருவன் சர்வதேச மனிதனாக மாறுவதற்கு முன், தன் தேசத்தின் மனிதனாக வாழ வேண்டும்.

அதாவது அவன் தன்னைத் தேசிய மனிதனாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

இலங்கைப் பிரஜை ஒருத்தர் தன்னைத் தேசிய மனிதனாக மாற்றிக் கொள்வதற்கு கட்டாயம் இலங்கையின் தேசிய மொழிகளான தமிழையும் சிங்களத்தையும் கற்றே ஆக வேண்டும். இவ்வாறு இருமொழிப் பரிச்சயமுடைய மக்களால்தான் தனது கருத்தினைத் தனது சகோதர சமூகத்தவர்களுக்குத் தெரிவிக்கவும் அவர்களுடைய கருத்துக்களைத் தான் தெரிந்துகொண்டு இரு சமூகங்களும் புரிந்துணர்வோடு வாழவும் முடியும். இந்த இடத்தில் சீனத்தின் முதல்வரும் தத்துவ ஞானியுமான "கொன்பூசியஸ்" அவர்களின் கருத்தொன்றினை கூறிவைத்தல் பொருத்தமென நினைக்கின்றேன்.

தத்துவஞானி "கொன்பூசியஸ்" அவர்களிடம், "இந்த நாடும் அதன் ஆட்சியும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்" எனக் கேட்கப்பட்டபோது "முதலில் நான் மொழிச் சீர்திருத்தம் செய்வேன்"எனக் கூறினார்.

இதனைக் கேட்ட அவரது நண்பர்கள் இந்த நாட்டிலே தீர்க்க வேண்டிய எத்தனையோ முக்கியமான பிரச்சினைகள் இருக்க அவற்றிற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்காது ஏன் நீங்கள் மொழிச்சீர்திருத்தம் செய்வதற்கு முன்னுரிமையளித்தீர்கள்" எனக் கேட்டதும்,

ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமையே எல்லாப் பிரச்சினை களுக்கும் காரணம் என்றார்

எனவேதான் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கு உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகமான மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு அரசியல்வாதி பேசுவதை மற்ற அரசியல்வாதி சரியாகப் புரிந்துகொள்வதில்லை.

தப்பாக விளங்கி பொதுமக்கள் மத்தியிலே தப்பாக விளக்கம் கொடுத்து பிரச்சினையாக்கிவிடுவார்.

பொதுமக்களும் அவர் சொன்னதை சரியாகப் புரிந்துகொள்ளாமல்-விளங்கிக் கொள்ளாமல் பிழையான வழியிலே செல்ல எத்தனம் கொள்கிறார்கள்.

இதனால் நாட்டிலே பெரும் பிரச்சினையேற்பட்டு அடாவடித்தனமும் அட்டூழியங்களும் தலைதூக்கி விடுகின்றன.

இத்தனைக்கும் காரணமான மொழியை எல்லோருக்கும் புரிந்துகொள்ளக் கூடியவாறு மாற்றம் செய்ய நினைத்ததில் தப்பென்ன இருக்கிறது" எனக் கேட்டார்.

எனவேதான் நான் இங்கு எல்லோரும் எல்லா மொழிகளையும் கற்க வேண்டுமெனக் கூறுகிறேன்.

இது எமது நாட்டின் ஒற்றுமைக்கும் சுபீட்சத்திற்கும் வழிவகுக்கும் எனக் கூறி விடைபெறுகிறேன்

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகவாழ்வைச் சொல்வது சுக இலக்கியங்களே!

| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனை மஃமூத் மகளிர் கல்லூரி |
| தலைமை | : | டாக்டர் முருகேசம்பிள்ளை அவர்கள் |
| விடயம் | : | "நீரிழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக் குறிப்புக்களும்" நூல் வெளியீட்டு விழா |
| திகதி | : | 23-03-1998 |



இவ்விழாவிற்குத் தலைமை தாங்குகின்ற எனது மதிப்பிற்குரிய டாக்டர் முருகேசம்பிள்ளை அவர்களே!

நூலாசிரியர் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்களே!

உலமாப் பெருமக்களே!

இம்மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களே!

பெரியோர்களே!

அதிபர்களே!

ஆசிரியர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உடன் பிறப்புக்களே! எல்லோருக்கும் எனது சலாமும் வணக்கமும் உரித்தாகட்டும்.

மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் அவர்களின் "நீரிழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக் குறிப்புக்களும்" எனும் இந்நூல் வெளியீட்டு விழாவோடு அவருடைய மூன்று நூல்களின் வெளியீட்டு விழாக்களில் கலந்து கொண்ட மனத்திருப்தி எனக்கு ஏற்படுகிறது.

இதன் நிமிர்த்தம் நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாகின்றேன்.

நான் பல நூல் வெளியீட்டு விழாக்களில் கலந்து சிறப்புரையாற்றியுள்ளேன்.

மற்ற எல்லா நூல்களையும் விட இந்த நூல் இரண்டு விடயங்களில் எனக்குள் சிறப்புடையதாகப்படுகிறது.



ஒன்று, இந்நூல் மிகச் சிறியது, சுருக்கமானது.

"கடுகு சிறிது காரம் பெரியது" என்ற பழமொழிக்கொப்பானது.

ஒரு சாதாரண மகனும் படித்து விளங்கக்கூடிய மொழிநடை கொண்டது.

இரண்டாவது இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை மிக மிகத் தேவையானது இந்நூல் எனலாம். இன்று இலங்கையில் மட்டுமல்ல, உலகிலேயே ஆட்சி பண்ணுகின்ற சில நோய்களில் நீரிழிவு வியாதியும் ஒன்றாகும். எனவேதான் இந்நோய் பற்றி அனைவரும் அறிந்திருக்க வேண்டியவர்களாகின்றோம்.

இந்த வகையில் இந்நூல் இக்காலகட்டத்திற்குப் பொருத்தமான ஒன்றாகும். சமூகத்தின் தேவையறிந்து அந்தத் தேவைக்கேற்ப எழுதுபவனே உண்மையான எழுத்தாளன். இப்படிப்பட்ட எழுத்தாள னுடைய எழுத்துக்களைத்தான் மக்கள் பெரிதும் விரும்பிப் படிப்பார்கள்.

அதன் நிமித்தம் எழுத்தாளன் மதிக்கப்படுவான். மணிப்புலவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலை நான் வாசித்து முடித்தபோது எனது மனத்திலே ஒரு கருத்துப் புலனாகியது.

அதனை இங்கு கூறிவைத்தல் பொருத்தமும் பிரயோசனமும் உடையது என நான் நினைக்கின்றேன். இங்கு பல முதிர்ச்சியுள்ள எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இதனை சிந்தித்துப் பார்ப்பார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

இலக்கியப் பிரிவுகளிலே "சுக வாழ்வு" இலக்கியம் என்றொரு பிரிவு ஏற்பட வேண்டும்.

அந்தச் சுக இலக்கியப் பிரிவினிலே இது போன்ற நூல்கள் இடம்பெற வேண்டும்.

இலக்கிய நூல்களில் சில மனித மனங்களை வளம்படுத்த உதவுவது போல, சில நூல்கள் மனித உடல்களை வளம்படுத்த உதவுகின்றன.

அவ்வாறு உதவுகின்ற நூல்களை அதாவது உடலை வளம்படுத்த உதவுகின்ற நூல்களை "சுக வாழ்வு இலக்கியங்கள்" என அழைப்பதில் தப்பில்லையென நான் நினைக்கின்றேன்.



எனக்கு முன் பேசிய இந்நிகழ்வின் தலைவர் டாக்டர் முருகேசம்பிள்ளை அவர்கள் பேசும்போது "இப்படிப்பட்ட நூல்களை டாக்டர்களாகிய நாங்கள் எழுதியிருக்க வேண்டும். ஆனால் நாங்கள் எழுதவில்லை.

அந்தக் குறையினை நிவர்த்தி செய்ய மணிப்புலவர் அவர்கள் எழுதியிருக்கிறார்.

எனவேதான் டாக்டர்களாகிய நாங்கள் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் எனக் கூறினார்.

டாக்டர் அவர்களுடைய கருத்தினை அடியொற்றி நானும் இங்கு ஒரு சில கருத்துக்களையும் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

டாக்டர்கள் புனிதமான தொழிலைச் செய்பவர்கள். சமூகத்திற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானவர்கள். அவர்கள் தங்களுடைய கடமையை ஒழுங்காகச் செய்தால் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

பணத்தினை மனத்திலே கொண்டு அவர்கள் செயல்படவே கூடாது.

வாழ்வதற்குப் பணம் தேவைதான். ஆனால் பணம்தான் வாழ்க்கையென்று அலையவே கூடாது.

இந்த இடத்தில் எல்லாவற்றையும் கூற முடியாது என்பதனால் ஒரு சில விடயங்களை மட்டும் கோடிட்டுக்காட்டி சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்வார்கள் என்ற எண்ணத்தோடு விடயத்திற்கு வர விரும்புகின்றேன்.

நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு ஒரு நோய் ஏற்பட்டது. இந்த நோயினைப் போக்க எனது தகப்பனார் அலையாத அலைச்சல் இல்லை. காட்டாத டாக்டர் இல்லை. இப்படி இருந்தும் நோய் என்னை விட்டுப் போவதாகவும் இல்லை.



கடைசியாக இதே ஊரைச் சேர்ந்த நாட்டு வைத்தியர் ஒருவரை நாடினோம். நோய் குணமடைந்துவிட்டது. சந்தோஷமடைந்த எனது தகப்பனார் அவருக்குக் கூலியாகப் பணம் கொடுத்தார். அந்த வைத்தியர் ஏற்க மறுத்துவிட்டார்.

அன்பளிப்பாக ஏதும் கொடுக்கலாம் என்றால் அதற்கும் அவர் சம்மதப்படவில்லை.

நான் இத்தொழிலை சேவைக்காகச் செய்கின்றேனே தவிர பணத்திற்காகச் செய்யவில்லை எனக் கூறி மறுத்துவிட்டார்.

ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லையே என்பதை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது.

இ∴தே வேளை டாக்டர் முருகேசம்பிள்ளை போன்ற பணத்திற்கு அடிமையாகாத டாக்டர்களும் இருக்கிறார்கள் என்பதை நினைத்து என் மனம் சாந்தியடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிப்புலவர் அவர்களுடைய இந்த "நீரிழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக் குறிப்புக்களும்" எனும் நூல் அவருடைய அனுபவம், ஆராய்ச்சி, தேரையர், திருமூலர் போன்ற பதினென் சித்தர்களின் கருத்து, இன்றைய விஞ்ஞான முடிவு போன்றவற்றின் தொகுப்பாக மிளிர்கிறது.

இந்நூல் ஒவ்வொருவரது வீட்டிலும் இருக்க வேண்டிய நூல் எனக் கூறுவதோடு, மணிப்புலவர் அவர்கள் இன்னும் பல நூல்களை எழுதி, என்றும் வாழும் எழுத்தாளராக மிளிர வேண்டுமென ஆசித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புமுனையும் தீர்க்கமான முடிவுகளும்



| | | |
|---|---|---|
| இடம் | : | மருதமுனை அல்-மனார் மகாவித்தியாலயம் |
| தலைமை | : | ஏ.எச்.ஏ. மஜீத், அதிபர் |
| விடயம் | : | பாடசாலை முத்தமிழ் விழா |
| திகதி | : | 10-04-1998 |

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே, அல்ஹம்துலில்லாஹ்.

என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய இப்பாடசாலையின் அதிபர் அவர்களே!

உலமாப் பெருமக்களே!

ஆசிரியர்களே!

மாணவர்களே!

என் உடன் பிறவாச் சகோதரர்களே!

நண்பர்களே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களே! எல்லோர் உள்ளத்திலும் இறைவன் சாந்தியும் சமாதானமும் அளிப்பானாக.

இப்பாடசாலையின் முத்தமிழ் விழாவிலே கலந்துகொள்ளும் வாய்ப்பினை எனக்களித்த இறைவனுக்கு முதற்கண் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாய் உள்ளேன்.

இங்கு நடைபெற்ற முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது எனது உள்ளத்திலே கலை, இலக்கியம் சம்பந்தமாகவும், கலாச்சாரம் சம்பந்தமாகவும் எமது சமூகத்தின் நிலைப்பாடு என்ன? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் எங்கு சென்றுகொண்டிருக்கின்றோம் என்பன போன்ற பல எண்ணங்கள் எழுந்தன.

நான் முஸ்லிம் காங்கிரசின் தேசியத் தலைவன் என்ற வகையில் என் உள்ளத்திலே எழுந்த அக்கருத்துக்களை இங்கு கூறி வைத்தல் முக்கியம் எனப்பட்டாலும் அதற்குமப்பால் நான் கலை இலக்கியத் துறையிலே நீண்டகால அனுபவமும், அக்கறையும் உள்ளவன் என்ற வகையில் எனது உள்ளத்திலே எழுந்த எண்ணங்களை - கருத்துக்களை இங்கு கூறிவைத்தல் எனது கடமையெனக் கருதுகின்றேன்.

இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களாகிய எம்மைப் பொறுத்தவரை கலை, கலாச்சாரம், இலக்கியம், இயல், இசை, நாடகம் என்ற துறைகளுக்கு பங்களிப்புச் செய்தவண்ணம் எமது சகோதர தமிழ்ச் சமூகத்தாரோடு சேர்ந்து நீண்ட பயணத்தை மேற்கொண்டு நடந்துவந்து இன்று ஒரு திருப்புமுனையிலே நின்றுகொண்டிருக்கின்றோம்.

நாம் வந்த பாதையில், நாம் நடந்து வந்த நாட்களை விட இனிமேல் நடக்க வேண்டிய நாட்களே அதிமுக்கியமான நாட்கள் என நான் கருதுகின்றேன்.

இத் திருப்புமுனையில் இருந்துதான் எமது இளம் சந்ததியினர் எம்மைப் பின்தொடர இருக்கின்றார்கள்.

எனவேதான் நாம் சரியான பாதையைக் கண்டறிந்து அதிலே நடப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் அதிமுக்கிய தேவையாகும். இதனை மனத்திலே கொண்டு என் மனத்திலே எழுந்த அக்கருத்துக்களை இச்சபையில் முன்வைக்க விரும்புகின்றேன்.

இங்கு மேடையேற்றப்பட்ட இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் பலவற்றை மேலெழுந்த வாரியாக அல்லாமல் மிக உன்னிப்பாகவும் கவனமாகவும் பார்வையிட்டு சிலவற்றை மனதார இரசித்தும் சிலவற்றைத் தவிர்த்திருக்கலாம் என்ற எண்ணத்தோடுமே எனது கருத்துக்களை இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

இங்கு எனது எழுத்தாள நண்பர்கள் பலரையும் கலைஞர்கள், கவிஞர்கள் பலரையும் இரு சமூகத்து ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் காண்கின்றேன்.

இவர்கள் உள்ளங்களிலே நல்ல கருத்துக்கள் வேரூன்றுமேயானால் எதிர்காலத்தில் நல்ல பயனை நாம் எதிர்பார்க்க முடியும்.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை நாம் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் எமது கலை இலக்கிய பாரம்பரியம் பரந்து விரிந்த ஆழம் மிக்க ஒரு சமுத்திரத்தைப் போன்றது. இதற்கு உதாரணமாக அல்லது ஆதாரமாக பலவற்றைக் இங்கு கூற முடியும் என்றாலும் ஒன்றை மட்டும் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.



நாம் எமது தமிழ் இலக்கிய உலகிற்கு பங்களிப்புச் செய்த, இலக்கிய வடிவங்களான கிஸ்ஸா, மசாலா, நாமா, படைப்போர், முனாஜாத்து போன்ற முஸ்லிம்களுக்கே உரித்தான தனித்துவமான இலக்கிய வடிவங்களைக் கூற முடியும்.

தமிழ் இலக்கிய வடிவங்களாகக் கொள்ளப்படும் 96 பிரபந்த வகை வடிவங்களிலும் பல இலக்கியங்களைப் பாடியளித்து அதற்குமப்பால் சென்று எமது மூதாதையர்களின் வழிவந்த இலக்கிய வடிவங்களான மேற்கூறிய கிஸ்ஸா, மசாலா, நாமா, படைப்போர், முனாஜாத்து போன்ற இலக்கிய வடிவங்களுள் பல தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ஆக்கியளித்துள்ளோம். இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதாயின் அரேபிய, பாரசீக நாடுகளின் இலக்கிய வடிவங்களைப் பின்பற்றி தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களைப் படைத்தளித்துள்ளோம். இஃதே போல எமது மூதாதையர்கள் எந்த நாட்டில் இருந்து வந்தார்களோ அந்த நாட்டின் கலை கலாச்சாரங்களையும் எமக்குப் பாரம்பரியச் சொத்தாக இட்டுச்சென்றுள்ளனர். இதற்கு உதாரணமாக அரேபிய, பாரசீக, எகிப்திய பெண்களின் பாரம்பரிய கலாச்சார நிகழ்வான குரவையிடுதலையும் பெண்கள் தங்கள் கைகளிலே மருதோன்றியினால் வண்ணக்கோலமிட்டு அழகுபடுத்தலையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

இவை அனைத்தும் எமது மார்க்கக் கடமைகளுக்கு அப்பால் சென்றுவிடாவண்ணம் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். நாங்களும் அதனைப் பேணிப் பாதுகாக்கும் அதேவேளை எம்மிடையே இடைக்காலத்தில் எமது கலாச்சாரங்கள் போன்று எம்மோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கின்ற கலாச்சாரங்கள் சிலவற்றையும் பகுத்தும் பிரித்தும் பார்த்தறிந்து எமது இளம் சந்ததியினருக்கு அவற்றை இனங்கண்டு தள்ளவேண்டியதைத் தள்ளியும் கொள்ள வேண்டியதை மனங்கொண்டும் எடுத்து நடக்க வழிகாட்ட வேண்டும்.

இதனால்தான் நான் எனது பேச்சின் ஆரம்பத்தில் இக்காலகட்டம் நீண்டதொரு பிரயாணத்தின் பின் ஏற்பட்டுள்ள ஒரு திருப்புமுனை எனக் குறிப்பிட்டேன். இக்காலகட்டத்தில் கலை, இலக்கிய முயற்சிகளிலே ஈடுபடுகின்ற ஆசிரியர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் மிகமிகப் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் கண்ணியப்படுத்தப்பட வேண்டியவர்களாகவும் நான் கருதுகின்றேன்.

கலை கலாச்சாரங்களைப்பற்றிய தெளிவு இத்துறையிலே ஈடுபடுப வர்களிடம் இருக்க வேண்டும்.

கலாச்சாரங்கள் பல்வகைப்பட்டனவாக இருந்தாலும், இரண்டு வகைக் கலாச்சாரங்களில் நாம் மிகமிகக் கவனமாக இருக்க வேண்டும்.

அவற்றுள் ஒன்று நிர்வாணக் கலாசாரம் (இதனை ஆங்கிலத்தில் **Naked Culture** எனக் கூறுவார்கள்.) இரண்டாவது எதுவுமில்லாத கலாச்சாரம். இதனை ஆங்கிலத்தில் **Culture of Naked** - கல்சர் ஒப் நேக்கட் எனக் கூறுவார்கள். இரண்டாவது வகையான எதுவுமில்லாத - அதாவது எடுத்துக்கொள்வதற்கு எதுவுமில்லாத கலாச்சாரத்தை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தோமானால் அதனை மன்னித்து மறந்துவிடலாம்.

ஆனால் நிர்வாணக் கலாச்சாரத்தை நாம் பார்க்கவும் கூடாது, அனுமதிக்கவும் கூடாது.

எமது கலாச்சாரங்கள் எம்மை அந்நியர்கள் மத்தியிலே மதித்து நடக்கக்கூடியவாறு இருக்க வேண்டும். இதனை இன்னும் அழுத்தமாகக் கூறுவதாயின் அந்நியர்களின் ஒரு சில கலாச்சாரங்களும், நடைமுறைகளும் எம்மிடையே ஊடுருவாது பார்த்துக் கொள்ள வேண்டும். மேடையேற்றப்படுவது ஒரு சிறிய பாத்திரமாக இருக்கலாம். அதுவும் இரண்டொரு நிமிடங்களில் முடிந்து விடக் கூடியதாகவும் இருக்கலாம்.

இதனைப் போன்று நடிப்பவர்களும் சிறுவர் சிறுமிகளாக இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் அவை எமது மத அனுஷ்டானங்களுக்கு அல்லது சமூக விழுமியங்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடியனவாக அமைந்துவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

பாத்திரத்தை ஏற்று நடிப்பவர் அல்லது நடனமாடுபவர் சிறு பிள்ளையாக இருந்தாலும் அணிந்துள்ள ஆடை அணிகலன்களில் மிகமிக அவதானமாக இருத்தல் அவசியமாகும்.



சிறுபிள்ளைதானே என்று கவனக்குறைவாக இருந்துவிட்டால் விமர்சகர்கள் அல்லது நண்பனைப் போன்று நடிப்பவர்கள் மேற்படி விடயங்களைப் பெரிதுபடுத்தி விடுவார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரே இதனைப் பார்த்துக் கொண்டிருந்தார் என மேடைகளில் பேசுவது மட்டுமல்ல, பத்திரிகைகளிலும் அறிக்கை விடத் தொடங்கிவிடுவார்கள்.

எனவேதான் சின்னஞ்சிறிய விடயமாக இருந்தாலும் மேடையேறமுன், உலமாக்கள், கல்விமான்கள், கலைஞர்கள் போன்ற பொறுப்புணர்ச்சியுள்ள ஒரு குழுவினர் பார்வையிட்டு சரிகண்ட பின்பே மேடையேற்ற வேண்டும்.

இதனை நான் எப்பாடசாலை ஆசிரியர்களாக இருந்தாலும் சரி சகல ஆசிரியர்களிடமும் வினயமான ஒரு வேண்டுகோளாக விடுக்க விரும்புகின்றேன்.

இங்கு மேடையேற்றப்பட்ட இரண்டொரு நிகழ்ச்சிகளைத் தவிர மற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நிகழ்ச்சிகளும் தரமானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்திருந்தன.

இதன் நிமித்தம் இந்நிகழ்வுகளோடு சம்பந்தமுடைய சகலருக்கும் நான் தனிப்பட்ட வகையில் நன்றி சொல்லிக் கொள்கின்றேன்.

இக்கல்லூரியில் எமது சகோதர சமூகத்தைச் சேர்ந்த தமிழ் மாணவ - மாணவியரும் படிக்கிறார்கள் என எனக்கு இன்று சுட்டிக்காட்டப்பட்டதும் மகிழ்ச்சியாக இருந்தது. பாடசாலைகளும் விளையாட்டு மைதானங்களும் கலையரங்குகளும்தான் இந்நாட்டில் இன ஒற்றுமையை கட்டியெழுப்பக் கூடிய முக்கிய இடங்களென நான் கருதுகின்றேன். இன்று எமது நாட்டிலே இனங்களிடையே இன ஒற்றுமையை வளர்ப்பதுதான் ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடனாக உள்ளது.

அதிலும் குறிப்பாக இப்பிராந்தியத்தில் வாழ்கின்ற இரு சமூகங்களும் மிகமிக நீண்டகாலமாக ஒற்றுமையாக ஒன்றுபட்டு வாழ்ந்துவந்துள்ளோம்.

கலை, கலாச்சாரப் பண்புகள் கூட இரு சமூகத்தவரிடையேயும் இரண்டறக் கலந்தே காணப்படுகின்றன.

“முகம்மது” என்ற பெயரோடு “தம்பி” என்பதனையும் சேர்த்து மரியாதையாக “முகம்மதுத்தம்பி” என அழைத்துவந்துள்ளோம்.

சீனிமுகம்மது எனப் பெயர் வைத்துக்கொண்டோம்.

வெள்ளைத்தம்பி, சீனித்தம்பி எனப் பெயர் வைத்து அழைக்கும் வழக்கு எமது இருசாராரிடமுமே இருந்துவந்துள்ளது.

இந்த நிலைமை இன்று பகற்கனவு போலாகிவிட்டது. பழைய எமது உறவினைக் கட்டியெழுப்ப அல்-மனார் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

பாடசாலைகள் இனங்களைப் பிரித்துவைக்கின்ற இடங்களாக இல்லாமல் இனங்களைச் சேர்த்துவைக்கின்ற இடங்களாக மாற வேண்டுமென ஆசித்து இங்கு சமுகமளித்துள்ள அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளுக்குத் தொண்டு செய்பவன் இறைவனுக்குத் தொண்டு செய்கிறான்



| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனை சாஹிராக் கல்லூரி |
| விடயம் | : | சாரண இயக்க பட்டமளிப்பு விழா |
| தலைமை | : | ஏ.எம். ஹுசைன், அதிபர் |
| திகதி | : | 30.06.1998 |

இப்பாடசாலையின் அதிபர் ஜனாப் ஏ.எம். ஹுசைன் அவர்களே!

கல்வி அதிகாரிகளே!

உலமாப் பெருமக்களே!

ஆசிரியர்களே!

பொதுமக்களே!

அனைவருக்கும் எனது சலாம் உரித்தாகட்டும்.

நான் இப்பாடசாலைக்கு வருகை தந்தபோது எனக்கு பிரமாண்டமான வரவேற்பளித்துக் கௌரவித்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு நான் முதற்கண் உங்களுக்கு நன்றி செலுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

நான் இங்கு வருகை தந்தபோது இப்படியொரு வரவேற்பை எதிர்பார்த்து வரவில்லை.

ஒரு அமைச்சர் என்ற வகையிலோ, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவன் என்ற வகையிலோ வரவுமில்லை.

இப்பாடசாலையின் நலன்விரும்பிகளில் ஒருவன் என்ற வகையிலேயே சமுகமளித்தேன். இப்பாடசாலையின் அதிபர் குழாத்தில் அதிகமானோர் எனது நண்பர்கள் எனது கட்சி ஆதரவாளர்கள். நான் எவ்வளவுதான் உயர்ந்துவிட்டாலும் எனது நண்பர்களை நான் மறக்கவில்லை, மறக்கவும் மாட்டேன்.

அப்படி மறப்பதுவும் மதிக்காமல் இருப்பதுவும் மனிதப் பண்புமல்ல.

ஒருவன் உயர்ந்து வளர்ந்து உயர்பதவி வகித்துச் செல்வந்தனாக இருந்தாலும், அவன் தனது குடும்பத்தினரையும் நண்பர்களையும் சமூகத்தில் உள்ள ஏழை எளியவர்களையும் மறந்துவிட்டால் இறைவனை மறந்துவிட்டான் என்பதுதான் பொருள்.

இதற்கு நல்லதொரு உதாரணத்தை என்னால் கூற முடியும்.

ஓர் ஊரில் ஒருவர் வாழ்ந்து இறந்து விட்டார். இறந்தபின் அவருக்கு சொர்க்க பாக்கியம் கிடைக்கவில்லை.

உடனே அவர் இறைவனிடம் முறையிட்டார்.

"இறைவா, நான் உனக்காக வாழ்ந்தேன். எதனையும் உனக்காகவே செய்தேன். நீ கட்டளையிட்டபடி ஐவேளை தொழுதேன். நோன்பு வைத்தேன். மக்காவிற்கு புனித யாத்திரை மேற்கொண்டேன்.

இப்படியெல்லாம் இருந்தும் எனக்கு சுவர்க்க பாக்கியம் கிடைக்கவில்லையே" என அங்கலாய்த்துக் கொண்டார்.

இதனைக் கேட்ட இறைவன் "ஏ மனிதனே! நீ கூறிய அத்தனை கடமைகளையும் உனக்காகவே செய்து கொண்டாய். எனக்காக எதுவும் நீ செய்யவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்திற்காக ஒன்றைக் கூறுகிறேன் கேள்.

நீ ஒருநாள் உனது வீட்டில் உனது நண்பர்களுக்காக பெரியதொரு விருந்தளித்துக் கொண்டிருந்தாய்.

அப்போது ஒரு பரம ஏழை உனது வீட்டிற்கு வந்து 'பெரியவரே! எனக்குத் தாங்க முடியாத பசியாக இருக்கிறது. எனக்குக் கொஞ்சம் உணவளியுங்கள். எனது பசியைப் போக்குங்கள்" எனக் கெஞ்சிக் கேட்டான். அவனை ஏசி விரட்டி விட்டாய். அப்படி இருக்கும்போது எனக்காக எல்லாம் செய்ததாக எப்படிக் கூறமுடியும்" என அம்மனிதனைப் பார்த்து இறைவன் கேட்டான். இங்கு இதனை நான் எடுத்துக் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு.

அதனை நான் இங்கு விளக்கமாகக் கூற விரும்புகின்றேன்.

நானும் எனது நண்பர்கள் சிலரும் சேர்ந்து எனது சமூகத்தின் தேவைகள் சிலதை மனதிற் கொண்டு "முஸ்லிம் காங்கிரஸ்" என்ற ஒரு அமைப்பினை உருவாக்கினோம்.



கட்சி வளர்ந்து வரும்போது எனது நண்பர்களில் சிலர் கட்சியை விட்டு விலகிச் சென்றுவிட்டார்கள்.

அவர்கள் என்னை விட்டும் கட்சியை விட்டும் விலகிச் சென்றதற்குக் காரணம் கட்சி எதைச் செய்தாலும் அது அவர்களுக்கென்றே இருக்க வேண்டும் என்பதுதான்.

இதனை இன்னும் சுருக்கமாகக் கூறுவதாயின் "சுயநலமே." என்று கூறலாம்.

இவ்வாறு "சுயநலமாக" நடந்துகொள்வதை இறைவன் ஏற்க மாட்டான். அத்தோடு இது மக்களை ஏமாற்றுவதாக முடியும் என நான் நினைத்தேன். எனது பாதுகாப்புக் கருதி என்னைப் போக வேண்டாம் எனப் பாதுகாப்புப் படையினர் தடுத்தும் நான் இங்கு வந்துள்ளேன். ஏழைகளுக்குத் தொண்டு செய்வதே இறைவன் தொண்டாகக் கருதுகிறேன்.

அதனால் என்னுயிர் எனக்குப் பெரிதாகப்பட வில்லை.

இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கிறான். அதனால் இறைவன் பணியை மேற்கொண்டு இங்கு நான் வந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு நண்பர்கள் உதவ வேண்டுமே தவிர உபத்திரவமாக இருக்கக் கூடாது.

கட்சியின் மேல்மட்ட உறுப்பினர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், மத அனுஷ்டானம் போன்றவற்றில் மிகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.

இ∴தே வேளை மாணவர்களுக்கும் இங்கு ஒரு சில விடயங்களைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இப்பாடசாலையின் சாரண மாணவர்கள் என்னை சாரண முறைப்படி வரவேற்றார்கள்.

அதனை நான் பெருமையாகக் கருதுகின்றேன்.

நானும் ஒரு சாரணன் என்று கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சாரணன் எந்த இடத்திலும், தான் ஒழுக்கமாகவும் புனிதமாகவும் வாழக்கூடியவன் மட்டுமல்ல, நாட்டிற்கும் பிறருக்கும் எந்த நேரத்திலும் உதவி செய்வதைக் கடமையாகவும் கருதுபவன்.

தனித்தும் ஒருமித்தும் வாழக் கற்றுக் கொண்டவன்.

எதற்கும் ஆயத்தமாக இருப்பவன். எனவேதான் சாரண இயக்கம் மாணவப் பருவத்தினருக்குப் பேருதவி செய்யும் இயக்கமாக நான் கருதுகின்றேன்.

இதனால்தான் சாரண இயக்கம், மத, மொழி, இன வேறுபாடின்றி உலகளாவிய ஒரு இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அதனால்தான் சாரண இயக்கத்தின் தந்தை "பேடன் பவல்" அவர்கள் எல்லோராலும் நினைவு கூரப்பட வேண்டியவராகக் கருதப்படுகின்றார்.

அது மட்டுமல்ல,

இன்றைய எமது அரசு விளையாட்டுத் துறைக்கும் சாரண இயக்கத்திற்கும் ஊக்கமும் உதவியும் அளித்து வருகின்றது.

உதாரணமாக,

பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான புள்ளிகளில் மேற்கூறிய சாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கம், விளையாட்டு போன்றவற்றில் ஈடுபாடு காட்டியவர்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்பட்டு பல்கலைக்கழகம் போவதற்கு உதவுகிறது.

நான் சாரணனாக இருந்தபோது கற்றுக் கொண்ட பல பழக்க வழக்கங்கள் இன்றும் என்னோடு இருந்து எனக்கு உதவி புரிகின்றன.

உதாரணத்திற்கு எனது வாசிப்புப் பழக்கத்தினைக் கூற முடியும். இத்தனை வேலைப்பளுவுக்கு மத்தியிலும் நான் ஒரு சில பக்கங்களையாயினும் வாசிக்காமல் அன்றைய நாளைக் கழித்ததில்லை.

ஒரு சாரணன் நல்ல வாசிப்புப் பழக்கமுடையவனாக இருப்பான் என்று எனது சாரண ஆசிரியர் எனக்குச் சொல்லித் தந்தது இன்னும் எனக்குப் பசுமையாக ஞாபகம் இருக்கிறது.

இ∴தே போலத்தான் ஒரு சாரணன் எப்பொழுதும் விடாமுயற்சி உடையவனாக இருப்பான். ஒரு சாரணன் ஆகக் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு நன்மையாயினும் செய்வதற்குத் தன்னைப் பழக்கிக் கொண்டவனாக இருப்பான்.



எனவேதான் சாரண இயக்கம் மாணவப் பருவத்திற்கேற்ற நல்லதொரு இயக்கமெனக் கூறி இங்கு எனக்கு சாரண இயக்க முறைப்படி வரவேற்பளித்து கௌரவித்த சகல சாரண மாணவர்களுக்கும் கருவாக இருந்து உழைத்த ஆசிரியர்களுக்கும் எனது சாரண ஆசிரியர்களில் ஒருவரான மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத் அவர்களுக்கும் இங்கு சமுகமளித்துள்ள இப்பாடசாலையின் பெற்றோர்களுக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகளின் முக்கியத்துவமும் பேச்சுக் கலையும்



| | | |
|---|---|---|
| இடம் | : | கல்முனை சாஹிராக் கல்லூரி |
| தலைமை | : | ஏ.எம். ஹுசைன் அதிபர் அவர்கள் |
| விடயம் | : | தமிழ் மொழித்தினப் பேச்சுப்போட்டி |

இப்பாடசால அதிபர் அவர்களே!

ஆசிரியர்களே!

மாணவர்களே!எல்லோர் உள்ளத்திலும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக

எமது முஸ்லிம் மாணவர்களைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாக கல்முனை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆங்கிலமும் சிங்களமும் அவர்கள் மத்தியிலே முக்கியத்துவப்படுத்தப்பட்டு படிப்பிக்கப்பட வேண்டிய பாடங்களாகும்.

ஒருவன் ஆங்கில மொழியைத் தெரிந்திருந்தானேயானால் அவன் சர்வதேசப் பிரஜையாகிவிடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் தெரியாமல் இந்த நாட்டிலே வாழ்கின்ற பெரும்பான்மைச் சகோதரர்களோடு சௌஜன்யமான உறவை நாம் வளர்த்துக் கொள்ள முடியாது. எனவேதான் நான் எனது சமூகத்தின் எதிர்கால இளைஞர்களிடமும் மாணவர்களிடமும் ஆங்கிலத்தைப் படிப்பதற்கு முன்னுரிமையளித்துப் படித்து முன்னேறுங்கள் என்று சுட்டிக்காட்டி மேடைகளிலும் கலந்துரையாடல்களிலும் கூறிவருகின்றேன்.

மாணவர்களின் வழிகாட்டிகளான ஆசிரியர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு பாடசாலையிலும் ஆங்கில மொழியைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

இதேபோல எந்த மொழியாய் இருந்தாலும் சரளமாகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதுவும் மொழிகளை மேடையில் பேசுவது. அதாவது மேடைப் பேச்சென்பது ஒரு கலையாகும்.



இதனை வளர்த்துக் கொண்டால் மட்டுமே தலைமைத்துவம் சிறப்படைய முடியும். உலகில் எந்தவொரு தலைவனை எடுத்துக் கொண்டாலும் அந்தத் தலைவன் பேச்சாற்றல் உள்ளவனாக இருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

நான் கல்முனைக்குடி அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் 3ம் வகுப்புப் படிக்கும்போது எனது ஆசிரியர் புலவர்மணி சரிபுத்தீன் அவர்கள் எனக்கு ஒரு சிறிய பேச்சினை எழுதிக் கொடுத்து எதிர்வரும் மாணவ மன்றத்தில் அதனை பேசுமாறு பணித்ததும் அதனை சிரமேற்கொண்டு நானும் செய்தேன்.

எனக்குள் பேசும் ஆற்றல் உண்டு என்பதை இனம் கண்டு பேசுவதற்கு ஆவன செய்த அவரை நான் என்றென்றும் நன்றியறிதலோடுதான் பார்க்கின்றேன்.

ஆசிரியர்கள் இதுபோன்ற விடயத்தில் மிக மிக கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களிடம் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவன செய்ய வேண்டும்.

நான் முன் குறிப்பிட்டது போல பேச்சு என்பது ஒரு கலை.

இக்கலையிலே எமது அயல் நாடான தமிழ் நாட்டில் தமிழ்ப் பேச்சாளர்கள் ஏராளம் உண்டு.

உதாரணமாக ஈ.வே. ராமசாமி பெரியார் அவர்களையும்

திரு. வி.க. சம்பந்தமூர்த்தி அவர்களையும்

ராஜாஜி, ப. ஜீவானந்தம், ம.பொ.சிவஞான கிராமணியார், முத்து இராமலிங்கத் தேவர், அறிஞர் அண்ணா, கி.ஆ.பெ. விஸ்வநாதன், கலைஞர் மு. கருணாநிதி, கிருபானந்த வாரியார், புலவர் கீரன், குன்றக்குடி அடிகளார், நாவலர் இரா நெடுஞ்செழியன் போன்றோரையும் குறிப்பிட முடியும்.

இதேபோல உலகிலே பெயரெடுத்த பேச்சாளர்களாக கிரேக்க மக்களைக் கவர்ந்தெடுத்த டெமாஸ்தனிஸ்,

ரோமானிய மக்களை தனது பேச்சாற்றலால் வியப்பில் ஆழ்த்திய சிசரோ,

பிரிட்டிஷ் சிந்தனையாளர் புருனோ,

அனல் கக்கப் பேசி மக்களின் கண்களில் புனல் வழியச் செய்த புரட்சியாளன் லெனின்,

நம்பிக்கையிழந்த பிரிட்டிஷ் மக்களின் இதயத்தில் போர்க்களத்திலும் நம்பிக்கை ஒளியை தன்னுடைய தீரமிக்க பேச்சாற்றலால் ஏற்படுத்திய வின்ஸ்டன் சேர்ச்சில்,

அடிமைத்தளையை உடைத்தெறிந்த ஆப்ரஹாம் லிங்கன்,

சர்வாதிகாரி ஹிட்லர் போன்றோரைக் குறிப்பிடலாம்.

ஹிட்லர் "எழுதப்படும் சொல்லை விட வாயினால் உச்சரிக்கப்படும் சொல் அதிக வலிமை வாய்ந்தது". எனக் கூறியுள்ளார்.

ஏன் நமது நாட்டிலும் கூட இப்படிப்பட்ட பேச்சாளர்களை குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

உதாரணமாக எமது நாட்டின் பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரநாயக்க, சட்டத்தரணி ஜீ.ஜீ. பொன்னம்பலம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசதுரை, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் அமிர்தலிங்கம், கொல்வின் ஆர்.டி. சில்வா, கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத், காத்தான்குடி மௌலவி றவூப் ஆகியோரைக் குறிப்பிட முடியும்.

இதனை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் எமது நாட்டின், எமது சமூகத்தின் தலைவர்களாக வரவிரும்புகின்றவர்கள் இப்படிப்பட்ட மொழித்தின பேச்சுப் போட்டிகளைப் பயன்படுத்தி முன்னேற முயற்சிக்க வேண்டுமெனக்கூறி கடைசியாக இந்நிகழ்வுக்கு என்னையும் அழைத்து எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்த இந்நிகழ்வோடு சம்பந்தமுடைய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்த பின்
# யோசிக்க

பாடங்கள் படிப்பினைகளாகி, அனுபவ முத்திரைகளோடு, தனக்கும் பிறருக்கும் பயன் தருவதாக அமைய வேண்டுமென்ற எண்ணத்தோடு "வாசித்த பின் யோசிக்க" என்ற தலைப்பில் முடிவுரையாக சில விடயங்களை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். 

அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களை நான் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு எனது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடைபெறும் ஏதாயினும் ஒரு நிகழ்வில் கலந்து கொள்ள அவர் வரும் போது கிடைக்கும்.

அச்சமயம் அருகருகே இருந்து பலதையும் பத்தையும் கதைத்துக் கொள்வோம்.

"வெற்றிலை இருந்தால் கொடுங்கள்" என என்னிடம் கேட்பார். நான் தொடர்ந்து வெற்றிலை சாப்பிடும் பழக்கமில்லாதவன் ஆனபடியால் என்னிடம் இல்லாவிட்டாலும் வரவழைத்துக் கொடுப்பேன். நான் அவரிடம் கொடுத்த ஒரு வெற்றிலையில் பாதியில் பாதியை கிழித்து சிறியதொரு பாக்குப்பிளகினையும், சுண்ணாம்பினையும் அதனுடன் சேர்த்து கராம்பு, கைப்பு என்பவற்றையும் அவற்றோடு கூட்டாக்கி வாய்க்குள் வைத்துக் கொள்வார்.

முழு வெற்றிலையையும் அப்படியே எடுத்திருக்கலாமே என்றால் "எழும்பி எழும்பிப்போய் வெளியிலே எச்சில் உமிழ முடியாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் மிகக் குறைந்தளவு சாப்பிட்டுச் சந்தோஷப்பட்டுக் கொள்கிறேன். அதிலும் நீங்கள் "கைப்பின்" மகிமை பற்றிக் கூறிய அந்தக் கருத்தினை உள்வாங்கிக் கொண்ட பிறகு அடிக்கடி கைப்புச் சேர்த்து வெற்றிலை சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது. நம் முன்னோர் பாலியல் விடயத்தில் எவ்வளவு முதிர்ந்த அறிவுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு "கைப்பு" நல்லதொரு சாட்சியம்" என்பார்.

வெற்றிலை சாப்பிட்டு உதடு சிவந்ததும் நல்லதொரு "மூட்" அவருக்கு என்பதை புரிந்து கொள்வேன்.

இப்படிப்பட்ட வேளைகளில் நானும் அவரும் ஆசிரியரும் மாணவனும் போல மிக மிக மரியாதையோடும்,

சில வேளைகளில் அரசியல் வாதிகளைப் போல மறைத்தும் மறையாமலும், தொட்டும் தொடாமலும் உள்ளொன்றும் புறமொன்றுமாகவும்,

சில வேளைகளில் இஸ்லாமிய இலக்கிய வாதிகளாகி இலக்கிய ஊடகத்தினூடே எவ்வாறு மனித நேயத்தைத் தேடலாம். என யோசிப்போம்.



சில வேளைகளில் கணவன் மனைவி போல காது கடித்து இரகசியம் பேசுவதுமுண்டு. இப்படிப்பட்ட நல்லதொரு பகற்பொழுதாக 26.07.2000ம் ஆண்டு மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அஷ்ர.்.ப் ஞாபகார்த்த ஆராதனை மண்டபத் திறப்புவிழாத் தினம் அமைந்திருந்தது.

இந்த விழாவிற்கு அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

நான் வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தேன்.

நாங்கள் இருவரும் மேடையை நோக்கி படிகளில் ஏறும் போது எனது தோளில் கையை வைத்து


"மஜீத் சேர் உங்களுக்கு சால்வை மிக அழகாக இருக்கிறது, இது நமது கலாச்சாரம், இப்பொழுதெல்லாம் எம்மவர்கள் எவரும் சால்வை போடுவதில்லை. நீங்கள் இதனை விட்டு விடாமல் தொடர்ந்து அணியுங்கள்" எனக் கூறிய வார்த்தைகள்தான் அவர் என்னோடு பேசிய கடைசி வார்த்தைகள்

கூட்ட முடிவில் அதிபரின் அறைக்குச் சென்று பாடசாலை சம்பவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டுப் புத்தகத்தினை எடுத்து குறிப்பொன்றை எழுதினார். அக்குறிப்பின் போட்டோப் பிரதிதான் இது


This is the true copy from our School Log Book





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் நான் அவரைச் சந்திக்கவேயில்லை

2000ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் திகதி மப்பும் மந்தாரமுமான ஒரு பகற் பொழுதில் அவரது இறப்புச் செய்தி கிடைத்தது.

இச் செய்தி கிடைத்த போது கல்முனை மஃமூத் பாளிகாவில் கல்முனை கல்வி வலய அதிபர் கூட்டத்தினை நடத்திக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடன் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எம்.ரி. நிஸாம் அவர்களும் இருந்தார்.

இச் செய்தியை உண்மையானதா என உறுதிப்படுத்திக்கொள்ள முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹசன் அலி அவர் களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஊர்ஜிதம் செய்து கொண்டோம்.(இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்)

உடனே நான், “கண்ணீர்த்துளிகளை பன்னீர்த்துளிகளாக்கினோம்” எனும் தலைப்பில் இரங்கற் கவியொன்றினை எழுதி அச்சிட்டு ஊரில் வினியோகித்ததோடு தெரிந்தவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைத்தேன்.




இக்கவிதை 2003 செப்டப்பர்மாதம் கலாபூசணம் யூ.எல். ஆதம்பாவா, றியாத் ஏ- மஜீத் ஆகியோர் தொகுத்த “பகலில் ஒரு சூரியனின் அஸ்தமனம்” எனும் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளது.

இத்தொகுதி ஐக்கிய நண்பர்கள் ஒன்றியம், “மெஸ்ரோ” ஆகிய இரண்டு அமைப்புக்களின் வெளியீடாகும்.

இலங்கையில் வெளியான முதலாவது இரங்கற் கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

இப்படிப்பட்ட அழியாத நினைவுகளோடும்,

நல்லதொரு நண்பனை, அரசியல் தலைவனை, நல்லதொரு இலக்கியவாதியை இழந்து தவிக்கும் மனோநிலையோடும், விடைபெற்றுக் கொள்ளும்



மணிப்புலவர் மருதூர் ஏ-மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் துளிகளை
## பன்னீர் துளிகளாக்கினோம்

நேற்று
ஊரும் உலகும்
ஒரு கணம்
ஸ்தம்பிதமாயின
மக்கள்
உணர்வற்றுக் கிடந்தனர்.
வானொலி, ரீவி, மின்சாரம்
எல்லாமே இயங்கமறுத்தன
இவைகளோடு நீங்கள்
நெருங்கிப் பழகியவர்
என்பதனாலா?
அவைகளுக்கும் துக்கம்,
தொண்டையை அடைத்ததுவா?
எதையும் நம்ப முடியாத
ஒரு நிலை மக்களுக்கு.
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகி விடாதா? என
அங்கலாய்த்தோம்.
அதனால்,
இறைவனிடம்
இருகரம் ஏந்தி
இறைஞ்சி நின்றோம்.
முடியாமல் போய் விட்டதே.

★

முஸ்லிம் காங்கிரஸின்
மொட்டுக்களே!
போராளிகளே!!
என நீங்கள்
எங்களை
அழைக்கும் ஒலி
அலையலையாய்
எங்கள் காதுகளில்
முட்டி மோதிச் செல்கின்றதே!

அதனால், நாங்கள்
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகிவிடாதா? என
இருகரம் ஏந்தி
இறைஞ்சி நின்றோம்.
முடியாமல் போய் விட்டதே.

★

கிழக்கிலே உதயமாகும்
பூரண சந்திரன்
உங்கள் முகமா?
அது கண்ணெதிரே
காட்சி தருகிறதே
அதனால்,
நாங்கள்,
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகி விடாதா? என
இறைவனிடம்
இருகரம் ஏந்தி
இறைஞ்சி நின்றோம்,
முடியாது போய் விட்டதே.

★

நீங்கள் சொன்னது
எதுவும்
பொய்யாவதில்லை.
"கழுவிக் குளிப்பாட்டி
கபனிடும் வேலையை
உங்களுக்குத் தந்து
தொந்தரவு செய்ய மாட்டேன்"
என
உம்றாவுக்குப் போய்வந்து
உறுதிமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினீர்கள்.
அதைக்கூட மெய்யாக்கி
எங்களை
அழுது புலம்ப விட்டீர்கள்.
எதையும் தாங்கும்
இதயம் எங்களுக்கு.
ஆனால்,
உங்களின்
இறப்புச் செய்தியை
எங்களால் தாங்க முடியவில்லையே.
அதனால்தான்,
நாங்கள்,
கேள்விப்பட்ட செய்தி
வதந்தியாகிவிட
இறைவனிடம்
இருகரம் ஏந்தி
இறைஞ்சி நின்றோம்,
முடியாது போய்விட்டதே.

★

அரசியல் சாணக்கியன் நீங்கள்,
அதனால்.
தென்கிழக்கின்
உதயதாரகையாகி
நாற்றிசையும் பிரகாசித்தீர்கள்.
கவிஞர்களுக்கெல்லாம்
கவிஞர் திலகம் நீங்கள்.
அதனால்,
உங்களைப் பாடாத
கவிஞனேயில்லை எனலாம்
நீங்கள்
காட்டியதெல்லாம்
புதிய வெளிச்சங்கள்!
அதனால்,
உங்கள்
காலடிக்கு வராத
அரசியல்வாதிகளே
இல்லையெனலாம்.
வாதத்திறனில்
உங்களுக்கு நிகர்
நீங்களேதான்.
அதனால்தான்.
உங்களோடு விவாதித்த
எவரும் வெல்லவில்லை.
இத்தனைக்கும் மேலாக
நீங்கள் நல்லதொரு மனிதர்.
அதனால்தான்,
மயோன் முஸ்தபா வீட்டிலும்
வெள்ளைக் கொடி பறக்கிறது.
அக்கரைப்பற்றில்
சேகுஇஸ்ஸதீன்
கட்சி பேதமின்றி
கடைகளைப் பூட்ட
கட்டளையிட்டார்.

★

எல்லோர் மனங்களையும்
கொள்ளை கொண்ட
அஷ்ரப் "பூ"
அகாலமாய்
உதிர்வதைப் பார்த்து
துடிதுடிக்கும்
மக்களின்
கண்ணீர்த்துளிகளை
பன்னீர்த்துளிகளாக்கினோம்.
உங்களின்
ஆத்மா
எங்களோடுதான் இருக்கிறது.
உங்களின்
ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மணிப்புலவர்**
**மருதூர்.ஏ.மஜீத்**

01.பன்னீர் வாசம் பரவுகிறது. (சிறுகதைத்தொகுப்பு) – 1979

02.மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள் (கட்டுரை) – 1990

03.இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள் (தொகுப்பு) – 1992

04.பன்னீர்க்கூதலும் சந்தனப் போர்வையும் (கவிதைகள்) – 1995

05.மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை (ஆய்வு) – 1995

06.இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும் (அறிவியல்) – 1996

07.நீரழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக்
குறிப்புக்களும் (அறிவியல்) – 1996

08.தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு (ஆய்வு) – 2001

09.வேர் (தனிமனித வரலாறு) – 2002

10.சர்வ மதங்களிலும் நோன்பு (அறிவியல்) – 2004

11.தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல் (ஆய்வு) – 2007

12.மூட மறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும் (கவிதைகள்) – 2009

13.கூடு கட்டத் தெரியாத குயில்கள் (சிறுகதைத்தொகுப்பு) – 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org